# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Thuninthelu Magazine

பதிவு இல:
ISSN 2792-1026

+94776391188 www.skymediasl.com skytamil.lk@gmail.com

மாதமிருமுறை | இதழ் - 17 | 05 டிசம்பர் 2021

@skytamil.lk




ஸ்கை தமிழின் மற்றும் ஒரு முயற்சி கத்தார் நாட்டில் ஓவியத் திறமையை வெளிக்காட்டி வரும் இளைஞனுக்கு இலங்கைத் தூதுவர் பாராட்டு



கல்முனை சாஹிரா மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்!



தேசிய மீலாத் தின கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கவிஞர் அப்துல் றகுமான்



கின்னஸ் சாதனையில் இளம் நடனக் கலைஞர் தக்சாளினி



## Ceylon Talk Youtube Channel
பிரதம நிர்வாகி மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர்

# சஹானா மதுசூதன்

அவர்களுடனான நேர்காணல்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதமிருமுறை | இதழ் - 17 | 05 டிசம்பர் 2021






**ஸ்கை தமிழின் மற்றுமொரு முயற்சி**
கத்தார் நாட்டில் ஓவியத் திறமையை வெளிக்காட்டி வரும் இளைஞனுக்கு இலங்கைத் தூதுவர் பாராட்டு

04 பக்கம்

10 பக்கம்

கின்னஸ் சாதனையில் இளம் நடனக் கலைஞர் **தக்சாளினி**







கல்முனை சாஹிரா மாணவன் தேசிய ரீதியில் **முதலிடம்!**

11 பக்கம்

25 பக்கம்

**Ceylon Talk Youtube Channel**
பிரதம நிர்வாகி மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர்
**சஹானா மதுசூதன்**
அவர்களுடனான நேர்காணல்







தேசிய மீலாத் தின கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கவிஞர் அப்துல் றகுமான்

41 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி
பாதிமா முனீரா
எம்.ஐ.எம்.அம்னா
ஷஹ்னா ஸப்வான்
பஹ்ரியா பாயிஸ்
ஆர்.எம்.சப்ராஸ் - ஊடகவியலாளர்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்

**ஆசிரியர் குழு :**

ஆதம்பாவா முஹம்மது சாஜித்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
ஜவ்சன் அஹமட் - ஊடகவியலாளர்
பாத்திமா சிரோணி
ஷகீனா ஷாகிர்
தி.தர்சினி
அகீப் நஸீர் - Graphic Designer
எம்.ஜ.எம். முபீத்
மஜினா உமறு லெவ்வை
பாத்திமா பின்த் சம்சுதீன்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்
அமின் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்


இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே அல்ஹம்மதுலில்லாஹ்!

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசியர்குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.




**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 skytamil.lk@gmail.com
www.skymediasl.com

விரைவில்...
GET IT ON Google Play | Available on the App Store

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk

Scan QR Code






# துணிந்தெழு சஞ்சிகையின் மற்றுமொரு முயற்சி

## கத்தார் நாட்டில் ஓவியத் திறமையை வெளிக்காட்டி வரும் இளைஞனுக்கு இலங்கைத் தூதுவர் பாராட்டு



கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் மற்றும் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை குழுவினருக்கிடையிலான சந்திப்பு கடந்த வாரம் (15) கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவராலயத்தில் இடம்பெற்றது.

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பளார் ஜெ.எம்.பாஸித் மற்றும் ஓவியக் கலைஞர் நஸார் சர்பான் ஆகியோர் கட்டார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீனை சந்தித்து, கட்டார் நாட்டில் ஓவியக் கலையில் தனது திறமையை வெளிக்காட்டி வரும் இலங்கையைச் சேர்ந்த நஸார் சர்பான் வரைந்த ஓவியங்களை காண்பித்ததையடுத்து தூதுவர் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இதன்போது பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்வில் தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸ் (நளீமி) உம் கலந்து கொண்டார்.

தற்போது கத்தாரா அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓவியக் கண் காட்சியில் நஸார் சர்பான் வரைந்த ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு, இக் கண்காட்சியானது டிசம்பர் (06) வரை நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.




# Sky Trust எனும் ஆங்கில சஞ்சிகையினை மிக விரைவில் வெளியிடுவதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறது.

துணிந்தெழு சஞ்சிகை கடந்த ஒரு வருட காலமாக சிறப்பான முறையில் இயங்கி வருவதுடன், தொடர்ந்தும் பல ஆக்கபூர்வமான தகவல்களை மாதந்தோறும் வாசகர்கள் மத்தியில் பகிர்ந்து வரும் தனித்துவமான சஞ்சிகையாகும்.

இச் சஞ்சிகையானது இலங்கை மட்டுமல்லாது கடல் கடந்து கத்தார் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வாசகர்களை உள்வாங்கி, பல புது முயற்சிகளுடன் சர்வதேச ரீதியாகவும் அறிமுகமாகி தொடர்ந்தும் வெற்றியுடன் பயணித்து வருகிறது.

அந்த வகையில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் மற்றுமொரு முயற்சியாக ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்களையும், வாசகர்களையும் ஊக்குவித்து வரவேற்கும் பொருட்டு Sky Trust எனும் ஆங்கில சஞ்சிகையினை மிக விரைவில் வெளியிடுவதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறது.

ஆகவே அன்பர்களே!
நீங்களும் உங்கள் ஆதரவினை வழங்கி இச் சிறப்பான திட்டத்திற்கான பங்களிப்புக்களை வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## From now onwards Submissions are open!

You can send us your
- Articles
- Poetry
- Short story
- Photography
- Art
- Quotes
- Open letter

Sky Trust is providing you opportunities to bring out the best in you.Please be kind enough to send us your works asap.

Contact through,
0762211994(Whatsapp)
skytrust.lk@gmail.com(email)

For more updates:
https://facebook.com/skytrust.lk
https://Instagram.com/skytrust.lk




# நூர் ஷாஹிதா எழுதிய உதிர்ந்த இலைகள் கவிதை நூல் வெளியீட்டு விழா




ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு வெளியீட்டில் நூர் ஷாஹிதா எழுதிய “உதிர்ந்த இலைகள்” கவிதை நூல் வெளியீட்டு விழாவில் இணைந்து பூரணமான பங்களிப்புக்களை வழங்கிய அனைத்து நன்நெஞ்சங்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

அத்துடன் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த தென்னிந்திய பிரபல எழுத்தாளர் லதா சரவணன் அவர்களது இணைவில் மட்டில்லா மகிழ்ச்சி அடைவதுடன், மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றும் கௌரவ அதிதியாக பங்கேற்று நல்லுரையினையாற்றிய இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், எப். எச். ஏ. ஷிப்லி ஆசிரியர் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.




மேலும் பல போதும் எம் தொழில் நுட்ப உதவியாளராக முன்னின்று செயற்படும் ஆசிரியர் குழு உறுப்பினரான பாத்திமா பின்த் சம்சுதீன் அவர்களிற்கும் மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, இந் நூல் வெளியீட்டு நிகழ்வினை இனிமையான குரலில் சிறப்பாக தொகுத்து வழங்கிய றொசான் முஹம்மது அவருக்கும் மிக்க நன்றிகள்.

அத்துடன் ஸ்கை தமிழ் உறுப்பினர்களாக சிறப்பான உரைகளை நிகழ்த்திய திருகோணமலை மாவட்டம் மற்றும் அனுராதபுர மாவட்டம் என்பனவற்றின் ஒருங்கிணைப்பாளர்களாக தொடர்ந்தும் நற் பணிகளை முன்னெடுத்து வரும் எச்.எம் ஹாஷிர், அஸீர் அஸ்ரா பானு அவர்களுக்கும் மிகுந்த நன்றிகள்.

இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு, எம் வேண்டு கோளுக்கிணங்க, நேயர்களாக நூல் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கிய இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்தும் இணைந்து கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமுவந்த நன்றிகள்.

இன்னும் இந்நூல் வெளியீட்டு நிகழ்விற்கு தலைமை தாங்கி, சிறப்பான முறையில் நடாத்துவதற்கு முன்னின்று செயற்பட்டு, நெறிப்படுத்தி ஒழுங்கு செய்த துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளர், பிரதம ஆசிரியர் ஜெ.எம் பாஸித் அவர்களுக்கும்

மிக்க நன்றிகள்.

மேலும் இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்கி செயற்பட்ட அனைத்து உள்ளங்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றிகள்.





# மரணித்த சூரியன்

ஏறூர்க்கவிக்கோ
ஏ.ஸீ.அப்துல் றகுமான்

படைப்பேதும் உருவாகாப்
பலகோடி யுகங்களின் முன்
படைத்திட்டானிறைவனதைப்
பகலவனென்றொளி வழங்க
இருளாட்சி செய்திட்ட
இருண்டதொரு அண்டவெளி
திடிரென்று ஓர் நாள்
தீப்பிளம்பால் ஒளியாகிச்
சுடர் பரப்பும் சூரியனைச்
சுற்றிப் பல கோள்கள்
கொடை வள்ளல்தனை நாடிக்
கூடிவரும் மாந்தரைப் போல்
உறவுமுறை பேணி
உலாவருதல் தொடங்கியது

சூரியக் குடும்பமெனச்
சூட்டியதோர் பெயர்க்கொப்ப
கொரோனா காலத்துக்
குடும்பமெனக் கோளனைத்தும்
ஒன்றையொன்று தொட்டுவிடா
ஒழுங்கசைவு தவறாது
அண்டவெளி தன்னில்
அண்டி நின்ற கோள்களெல்லாம்
பிணைப்பின் சுழல் வட்டப்
பிரிவினைகளல்லாது

ஒற்றுமையாய்ச் சுற்றி
உயிர் வாழக் காரணமாய்
எண்ணில்லாக் கோடியுகம்
எழிலரசாய்த் திகழ்ந்தவனே

உலகமது உயிர் வாழ
உறுதுணையாய் ஆனதினால்
கடவுளெனச் சில மாந்தர்
கைதொழுது பூசை செய்தும்
இறப்பென்பதனைவருக்கும்
இயல்பான தென்பதனை
உண்மையெனக் காட்டி
உயிர்துறந்து கரியானான்

படைப்புற்ற கால முதல்
பற்றியெரிந்திட்ட
பகலவனும் ஓர் நாள்
சூடடங்கியொளியிழந்து
சோர்ந்து கரித்துகளாய்க்
காலாவதியாகிக்
கதை முடிந்து போனகதை
விஞ்ஞானக் கற்பனைக்கும்
விளங்காதவோர் புதிராய்
உருவான நாள்தொட்டு
உயர் வெப்பச் சுவாலையுடன்

ஒரு கணமும் ஓய்வின்றி
ஓங்கியெரிந்திட்ட
ஓங்கார சக்தியெனும்
ஓய்வில்லாத் தீக்கடலாம்
சூரியனும் ஓர் நாள்
சுடரிழந்து அணைந்ததனால்
அண்டவெளி யெங்கணுமே
அதிக இருள் மூடியது

அரசனென நடுவிருந்து
அனைத்தையுமே காத்தவனோ
கரிக்கட்டியாகி உடல்
கரைந்தழிந்து போனதனால்
ஈர்ப்பு விசையென்ற
இணையில்லாச் சக்தியது
இல்லாமல் போனதனால்
இருந்தபிடி அற்று விடக்
கோள்களெல்லாம் திசைமாறிக்
கோபமுற்ற பிள்ளைகள் போல்
ஆளுக்கொரு திசையில்
அலைக்கழிந்து சென்றதனால்
சூரியக் குடும்பமெனச்
சூடியபேர் மறைந்து
அந்தகார இருளுக்குள்
அடியழிந்து மறைந்ததுவே

உயிரினங்கள் வாழ்ந்த
உலகமெனும் கோளதுவும்
பாதைதனையறியாப்
பயணிக்கும் வேளையிலே
இறுக்கமாயுலகத்தை
இணைத்து வைத்த ஈர்ப்புவிசை
இல்லாமல் போனதனால்
உலகமே வாழத்தினம்
உயிர்கொடுத்த உயிர்வாயு
உலகைவிட்டு விடைபெற்று
உடனே அகன்று விட
உயிரனைத்தும் சிலகணத்தில்
உயிரிழந்து மாண்டதுவே

என்ன நடந்ததுவோ
ஏதுவினை வந்ததுவோ
என்று கதறி மக்கள்
அவரவர்கள் மத வழியில்
ஆண்டவனை வேண்டிப்பலர்
அழுது கதறிடினும்
ஏனிறந்தோம் என்றவொரு
காரணமுமறியாமல்
கண் மூடித் திறப்பதற்குள்
கதைமுடிந்து உயிர்துறந்தார்

மூன்றிலிரு பங்காய் உலகை
மூடிநின்ற நீர்முழுதும்
வன் குளிரின் தாக்கத்தால்
வகை தெரியாதிறுகியது
புவிக்கோளாயிருந்த வையம்
பனிக்கோளாய் மாறியது
பலகோடி வருடங்கள்
உயிரோடிருந்த புவி
அனைத்துமழிந்து பெரு
அகிலமதே சுடுகாடாய்
அலைமோதிப் போகிறது

பாதையறியாது
பயணித்த உலகமது
ஆறுலட்சம் ஒளியாண்டின்
அதிவிரைவுப் பயணிப்பால்
இன்னுமொரு சூரியனின்
இணைசேரல் கிட்டியது
பாரியதோர் சூரியனின்
பவனிவரும் குடும்பமதில்
தானும் உள்நுழைந்து
தந்திரமாய் இடம்பிடித்து
வெப்பத்தை உள்வாங்கி
விரைந்து சுழன்றதனால்
பலகாலப் பனியுருகிப்
பழையபடி கடலாகி
அல்காக்கள் உயிர்பெற்று
அதிவிரைவாய் உருவாகி
மீண்டுமொரு உலகத்தின்
மீள் எழுச்சி தொடங்கியது.

# கின்னஸ் சாதனையில் இளம் நடனக் கலைஞர் தக்சாளினி



ஈழத்தின் அழகு நிறைந்த கிழக்கு மாகாணத்தில் கலையும் சமயமும் நேசிக்கப்படும் விபுலானந்தர் பிறந்த காரைதீவு மண்ணில் பிறந்தவர் தக்சாளினி. இவருடைய பெற்றோர் ஜெயகோபன் நந்தினி மற்றும் இரு சகோதரிகள் என அழகான குட்டிக்குடும்பம். ஆரம்ப கல்வியை காரைதீவு விபுலானந்தா பாலர் பாடசாலையிலும் தரம் 1 முதல் 6 வரை பெண்கள் பாடசாலையிலும் கற்றவர். நடன ஆசிரியர்களின் அன்பினால் ஏற்பட்ட ஈர்ப்பும் தன்னை அலங்கரிக்கும் பழக்கமும் இவரை நடனத்துறைக்குள் ஈர்த்தது அதனால் தரம் 6 இருந்து உயர்தரம் வரை விபுலானந்தா மத்திய கல்லூரியில் நடனத்தையும் ஒரு பாடமாக கற்றார்.

உயர்தரப் பரீட்சையிலும் திறமைச் சித்தி பெற்று நடனத் துறைக்காக யாழ் இராமநாதன் பல்கலைக்கழக நுழைவுக்காக காத்திருக்கும் இவர் 2019ம் ஆண்டிலிருந்தே விபுலானந்த மணிமண்டபத்தில் 3 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நடனத்தை கற்றுக் கொடுக்கும் ஒரு ஆசிரியையாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். இவற்றுக்கெல்லாம் காரணம் இவருக்கு கற்றுக் கொடுத்த ஆசிரியர்களின் நெறிப்படுத்தல்தான்.

அண்மையில் கொரோனா நிதிப் பங்களிப்புக்காக மதுரையை சேர்ந்த முரளிதரன் ஆசிரியரின் ஏற்பாட்டில் உலகளாவிய ரீதியில் பல நாடுகளைச் சேர்ந்த 850 மாணவர்களை இணைத்து ஷூம் தொழிநுட்பத்தினூடாக பயிற்றுவித்து 30 நிமிடங்கள் ஒரே நேரத்தில் யாவரும் மிக வேகமாக ஆடக்கூடிய தமிழ் வர்ணத்தை வழங்கி கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது. அதனூடாக கிடைத்த நிதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அந்த உலக சாதனை முயற்சியில் இலங்கையில் இருந்து பங்குபற்றிய 65 நடனக் கலைஞர்களில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 47 பேரில் தக்சாளினியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு இந்த வாய்ப்பு தேசிய கல்வி நிறுவகத்தில் பணியாற்றும் திருமதி. நிசந்தறாகினி திருக்குமரன் அவர்களினூடாக கிடைத்தது.

பல மேடைகளில் இவரது நடன அரங்கேற்றங்கள் நிகழ்ந்த போதிலும் இந்த கின்னஸ் சாதனை முயற்சியில் பங்காளரானதால் இவரது பெயர் வெளியில் பேசப்படுகிறது. பெண்கள் கலைத்துறையில் பல விமர்சனங்களை எதிர்கொள்வதால் அந்த துறையிலிருந்தே காணாமல் போவது வழக்கம். ஆனால் தக்சாளினி விமர்சனங்களை தாண்டி தொடர்ந்து நடனத்துறையில் பயணிக்கும் கனவுகளோடு காத்திருக்கிறார்.

இவரது குடும்பத்தினரும் காரைதீவு மக்களும் கொடுக்கும் ஊக்கத்தால் இன்னும் இன்னும் சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுவதாகவும் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பேன் எனவும் கூறும் இவரது எதிர்கால இலட்சியம் நடனத்துறையில் ஒரு சிறந்த விரிவுரையாளராக வரவேண்டும் என்பது அதற்கான அடித்தளத்தை அமைத்து கொடுத்த அத்தனை ஆசிரியர்களையும் நன்றி உணர்வோடு பார்க்கும் இளம் கலைஞர் தக்சாளினி அவர்களது கலைப் பயணம் வெற்றிப் பாதையில் நகர எமது வாழ்த்துகள்.



# கல்முனை சாஹிரா மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்!

YouTube LIVE Sky தமிழ் - இணைந்திடுங்கள்!

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் மாணவன் கல்முனை சாஹிரா மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்!

எம்.ரீ.எம்.அர்மாஸ், தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று, பாடசாலைக்கு நற்கீர்த்தியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

12 தொடக்கம் 18 வயதுப் பிரிவினருக்கான பேச்சுப் போட்டியில் தரம் 9ஆம் பிரிவைச் சேர்ந்த இம் மாணவன், பல முன்னணிப் பாடசாலைப் போட்டியாளர்களைப் பின்தள்ளி இச்சாதனையைப் புரிந்துள்ளார்.

வெற்றி பெற்ற இம் மாணவனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபீர், பகுதித் தலைவர், வகுப்பாசிரியர் திருமதி எம்.ஆர்.எப். இஸ்ஸத் ஜஹான் ஆகியோருக்கு பாடசாலை கல்விச்சமூகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



**எம்.ரீ.எம்.அர்மாஸ்**

தரம் 9 – கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 17 | 05 டிசம்பர் 2021



நூறுல் ஷிபா ஜாபீர்
யாழ்பாணம்

# உங்கள் பெற்றோரை முத்தமிடுங்கள்

பெற்றோர்கள் என்பவர்கள் அல்லாஹ் எமக்களித்த மிகப் பெரும் பொக்கிஷங்களாகும். அவர்கள் தம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் எமக்காக தம்மை அர்ப்பணித்து பல்வேறு தியாகங்களையும் புரிந்து தம் இரவுத் தூக்கங்களைத் துறந்து தம் உடலைக்கசக்கிப் பிழிந்து உணர்வுகளை அடக்கி எம்மை நல்ல முறையில் வளர்க்கப் பாடுபட்டவர்களாகும். இவை ஒவ்வொன்றையும் நாம் கண்கூடாகவே இன்று கண்டுகொள்கின்றோம்.

எனவேதான் இஸ்லாத்தில் இத்தகைய பெற்றோர்கள் குறித்தும் அவர்களது சிறப்புக்கள் குறித்தும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் சீரான வழிகாட்டல்களைத் தெளிவாகக் காட்டியுள்ளன.

**"அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தைக்கு நன்றி செய்யுங்கள்....."(04:36).**

அதுமாத்திரமல்லாது பெற்றோருக்குப் பணிவிடை செய்வதில் ஜிஹாதுடைய நன்மையைத் தேடிக் கொள்ளுமாறு ஸுன்னா எமக்கு வழிகாட்டுகின்றது. இதனையே பின்வரும் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. "ஒருவர் ஜிஹாதில் கலந்து கொள்ள அனுமதி கேட்டு நபியவர்களிடம் வந்தார். "உம் பெற்றோர் உயிருடன் உள்ளனரா?" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டார். அவர் "ஆம்" என்றவுடன் "அவ்விருவரில் நீ ஜிஹாது செய்து கொள். (ஜிஹாதுடைய நன்மையை அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் தேடிக்கொள்!)" என்றார்கள். (புகாரி முஸ்லிம்)

இவ்வாறு இஸ்லாத்தில் பெற்றோரின் சிறப்புக்கள் குறித்தும் அவர்களுக்குப் பணிவிடை செய்வது குறித்தும் அதன் முக்கியத்துவம் வெகுவாகக் கூறப்பட்டுள்ளன.அந்தவகையில் நாம் பெற்றோருக்கு செய்ய வேண்டிய அம்சங்களில் முக்கியமானதொன்றே அவர்கள் மீது அன்பு மற்றும் இரக்கம் காட்டுவதாகும்.
"இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும்

இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக! மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்று கூறிப் பிரார்த்திப்பீராக!" (17:24)

எனவே நாம் எம் பெற்றோர் மீது செலுத்தும் அன்பானது பல்வேறு வகைகளிலும் எம்மால் பிரதிபலிக்கப்படலாம். அந்தவகையில் இது அவர்களுக்கு கட்டுப்படல், அன்பளிப்புக்களை வழங்கள், அவர்களுக்காகப் பிராத்தித்தல், அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிதல் மற்றும் அவர்களது சுக துக்கங்களில் பங்குகொள்ளல் என ஒருவருக்கொருவர் வேறுபடலாம். எனினும் அவற்றில் மிகப் பிரதானமான ஒன்றே அவர்கள் இருவரையும் முத்தமிடுவதாகும்.ஆனால் இன்று நம்மில் பலர் இதனைக் கரிசனையில் எடுப்பதில்லை.

சற்று வளர்ந்து பெரியவர்களாகி மேற்படிப்புக்களைத் தொடர்ந்தவுடனோ அல்லது பல்வேறு தொழிற்துறைகளுக்கு அவர்கள் உள்வாங்கப்பட்டவுடனோ பெற்றோருடனுள்ள உறவு படிப்படியாக குறைய ஆரம்பிப்பதனை நாம் இன்று பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பெற்றோரை முத்தமிடுவது கூட அவர்கள் மத்தியில் ஏதோவொரு சங்கடமான நிலையில் காணப்படுவதை உணர முடிகிறது. இதற்குப் பல்வேறு காரணிகளை அவர்கள் அடையாளப்படுத்தலாம். அந்தவகையில் தந்தை மீதுள்ள பயம், மரியாதை, வெட்க உணர்வு, அதிகரித்த வேளைப்பளு போன்ற பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும் கூட அவை பெற்றோர்–பிள்ளை என்ற உறவில் எவ்வித பிரிவினையையோ விரிசலையோ ஏற்படுத்தவல்லதல்ல.

ஆண் பிள்ளையாயினும் சரி, பெண் பிள்ளையாயினும் சரி பெற்றோர் என்ற ரீதியில் தாய்,தந்தை இருவரும் எம் பெற்றோர்களே! நாமும் அவர்களுக்குக் குழந்தைகளே! எனவே இதில் எவ்விதக் கருத்து வேறுபாடுமில்லை. பெற்றோர்களை நாம் முத்தமிடுவது தொடர்பாக வெட்கப்படுவதற்கோ அல்லது அது குறித்து அஞ்சுவதற்கோ எவ்விதத் தேவையுமில்லை. இதற்கான வழிகாட்டல் நபியவர்களின் வாழ்விலும் கூட சிறப்பாக நடைமுறைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

அன்னை ஆயிஷா (ரழியல்லாஹ் அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பாத்திமா (ரழியல்லாஹ் அன்ஹா) அவர்கள் நபி (ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்களைச் சந்திக்க வந்தால் நபியவர்கள் எழுந்து சென்று வரவேற்று முத்தமிட்டுத் தம்முடைய இருக்கையில் அவரை உட்கார வைப்பார்கள். நபியவர்கள் பாத்திமா (ரழியல்லாஹ் அன்ஹா) அவர்களைச் சந்திக்கச் சென்றால் பாத்திமா (ரழியல்லாஹ் அன்ஹா) எழுந்து கைப்பிடித்து வரவேற்று முத்தமிட்டுத் தம் இருக்கையில் நபியவர்களை அமரச் செய்வார். நபியவர்கள் மரணப்படுக்கையில் நோயுற்றிருந்தபோது பாத்திமா (ரழியல்லாஹ் அன்ஹா) அவர்கள் சந்திக்க வந்தார்கள். அப்போதும் நபியவர்கள் அவரை வரவேற்று முத்தமிட்டார்கள்" (புகாரி முஸ்லிம்)

எனவே நாமும் எம் பெற்றோர்களை முத்தமிடுவோம். அதன் மூலமும் எம் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவோம். அவர்களுடன் எம் கருத்துக்களை பகிர்ந்து கொள்வோம். வெளிப்படையாய் அவர்களுடன் பேசுவோம். அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம். இதன் மூலம் வயது முதிர்ந்த காலத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கும் தேவைகளுள் மிகப் பிரதானமான உள ரீதியான அன்புத் தேவையை நிறைவேற்றி வல்லவன் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற முயற்சிப்போமாக! (இன்ஷா அல்லாஹ்)



# உள்ளங்கள் என் வசம்

ஸபியா அஸாத்
ஹிங்குல.

இவ்வுலகில் பிறக்கும் பிராணிகளில் மிகவும் பலவீனமான பிராணி மனிதனாவான். இக்கூற்றை அறிந்த தருணம் ஆச்சரியமடைந்தேன். பலவீனமான பிராணி இன்று இந்த பூலோகத்தை ஆட்சி செய்கிறது எனில் அதற்கான சக்தி என்ன என்பதே என்னில் உதித்த வினா. எனது வீட்டில் வளர்த்த ஆடு குட்டி ஈன்றது. அப்போது அந்த குட்டி எழுந்து நடக்க சில நாழிகைகள் அதற்கு தேவைப்பட்டது. ஓரிரு தினங்களில் தன் தாயிடம் இருந்து தனக்கான வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்ள பழகிக் கொண்டது.

சில வாரங்களில் ஓடி திரிந்தது. மனித வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பார்த்தேன் ஒரு மனிதக் குழந்தையையும், ஆட்டுக் குட்டியையும் ஒப்பிட்டு பார்க்குமிடத்து ஆட்டுக்குட்டி பலமானதாக எனக்கு தோன்றியது. அப்படியாயின் இறைவன் எதை வைத்து இந்த மனிதனை மிகைப் படுத்தினான் என்று சிந்தித்துப் பாருங்கள். அதுதான் பகுத்தறிவு.

இந்த அறிவினாலேயே மனிதன் இன்று உலகையே ஆட்சி செய்கிறான். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இறைவனால் ஒரு நோக்கத்தோடு படைக்கப்படுகிறான் என்பதே உண்மை. அனைத்து மனிதர்களிடமும் காணப்படும் வேற்றுமைகளே இதற்கான சான்று என நான் கருதுகிறேன். ஒரு வாகனத்தை பழுது பார்க்கும் ஒருவரிடம் காணப்படும் உபகரணங்கள் ஒவ்வொன்றும் தனது பணியை செவ்வனே செய்வதை அவதானிக்கலாம். அவ்வுபகரணங்களின் பணிகள் வேறு வேறாயினும் அவற்றின் அவசியத்தை அந்த பழுதுபார்க்கும் நிபுணரிடம் கேட்டுப்பாருங்கள். இதுபோன்றுதான் இவ்வுலகில் எம்மை படைத்த இறைவன் எமக்கென்று தனித்துவமான சக்தியை வைத்தே படைத்துள்ளான். எமது பணியை நாம் செவ்வனே செய்ய தயாராக வேண்டும் என்பதே அவனது எதிர்பார்ப்பு.

சரி நாம் இப்போது நம்மைப் பற்றி மீட்டிப் பார்ப்போம்.

நீங்கள் யார் என எப்போதாவது சிந்தித்து இருக்கிறீர்களா?,

நீங்கள் யார் என உங்களுக்கு தெரியுமா?

எந்த நேரமும் நீங்கள் நீங்களாகவே தான் செயல்படுகிறீர்களா?
அல்லது மற்றவர்களுக்காக செயல்படுகிறீர்களா?

என்று சிந்தித்துப் பாருங்கள். "எனக்குத் தெரியும் நான் நானாகவே தான் இருக்கிறேன்" என்பதாகத்தான் உங்கள் விடை காணப்படுமாயின் தற்போது நான் ஒரு பயிற்சி தருகிறேன். அது உங்களை நீங்களே புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறேன்.

நீங்கள் பாதையில் அவசரமாக நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது திடீரென உங்கள் முன்னால் ஒருவர் வந்து உங்களோடு கலந்துரையாட முற்படுகிறார். அப்போது உங்களுக்கும் அவருக்கும் ஒரு கருத்து முரண்பாடு ஏற்பட்டு விடுகிறது. இதனால் உங்கள் முன்னால் இருக்கும் நபர் உங்களை மிகவும் கேவலமாக கதைக்கவும், திட்டவும் செய்கிறார். உங்களைப் பற்றி, உங்கள் குடும்பத்தை பற்றி அவர் மிகவும் மோசமான முறையில் பேசுகிறார். தற்போது உங்கள் நிலை என்ன என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நீங்களும் அவருக்கு எதிராக ஏசத்தொடங்கினீர்கள் எனில் நிச்சயமாக நீங்கள் நீங்களாக இல்லை, நீங்கள் யார் என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள் மேலும் நீங்கள் முழுமையாக உங்கள் முன்னால் இருப்பவருக்கு அடிமையாகிவிட்டீர்கள் என்பதே கசப்பான உண்மை. இந்த உலகையே ஆட்சி செய்ய முன் நீங்கள் உங்களை ஆட்சி செய்ய கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது வாதம். அதாவது உங்கள் முன்னால் இருப்பவர் உங்களை ஏசும் போது அவரது கருத்துக்களில் உண்மை இல்லையாயின் அவரது கருத்துக்கள் உங்களை எந்த வகையிலும் பாதிக்கத்தேவையில்லை. உங்கள் முன்னால் உள்ளவரின் கருத்து உங்களை முழுமையாக பாதிக்குமெனில் அவருக்கு உங்கள் உள்ளம் அடிமையாகி விட்டது என்பதனை மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நீங்கள் யார்? என்பதை பற்றி உங்களுக்கு தெளிவான நம்பிக்கை இருந்தால் மற்றவர்கள் உங்களைப் பற்றி சித்தரித்து கூறுவதால் நீங்கள் ஒருபோதும் தாக்கமுற மாட்டீர்கள் என்பதே உண்மை.

இந்த எளிமையான பாடத்தை நமது அருமை பெருமானார் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்வில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தின் மூலம் நான் கற்றுக்கொண்டேன்.ஒருமுறை வயதான மூதாட்டியின் கையில் இருந்த பையை தான் வாங்கி அதனை அவருக்காக சுமந்து வந்து கொண்டிருந்த வேளையில், நமது நபியை அறிந்திராத அந்த மூதாட்டி நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களிடமே அவரைப்பற்றி மிகவும் மோசமான முறையில் கூறிக்கொண்டே வந்தார்கள். வழிநெடுகிலும் அந்த மூதாட்டியின் பைகளை சுமந்த வண்ணம் வந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு அந்த மூதாட்டியின் வார்த்தைகள் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை இங்கே அவதானிக்கலாம். பிறகு தான் தான் இவ்வளவு நேரம் அவர் திட்டித்தீர்த்த மனிதர் என புன்சிரிப்போடு தன்னை அந்த மூதாட்டியிடம் அறிமுகப்படுத்திக்கொண்டார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களை கண்டு கொண்ட மூதாட்டி மிகவும் வருந்தி, அவரிடம் மன்னிப்பு கேட்டு இஸ்லாத்தை ஏற்றார்கள். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த ஒரு உளவியல் பாடமாகும். ஒருவர் உங்களுக்கு எதிராக செயற்படும் போது / உங்களை வார்த்தைகளால் வதைக்கும் போது நீங்கள் அவருக்கு எதிராக செயற்படுவதால் நீங்கள் உங்களைச் சுற்றி எதிர்மறையான தாக்கத்தை தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே இதனடிப்படையில் உங்களை சுற்றி யார் இருக்க வேண்டும்? நண்பர்களா? எதிரிகளா? என தீர்மானிக்கும் சக்தியும் உங்களிடமே காணப்படுகிறது. என்பதைத்தான் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இந்த சம்பவத்தின் மூலம் எடுத்துக் காட்டினார்கள்.

எப்போதுமே யாரோ ஒருவரைப் பார்த்து அவரைப் போன்று உருவாக வேண்டும். என்ற முன்மாதிரியை தான் நாம் எம் வாழ்வில் இலக்காகக் கொண்டு செயல்படுகிறோம். ஆனால் எதிர்காலத்தில் எம்மைப் போன்று பலர் உருவாக நாம் காரணமாக இருக்க வேண்டும் என்று எப்போதாவது சிந்தித்து உள்ளோமா? அப்படி சிந்திக்கும் போதுதான் எமது சக்தியை நாம் அறிந்து கொள்கிறோம். எம்மை நாம் ஆட்சி செய்கிறோம்.

எனவே தான் இவ்வுலகில் படைத்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் வீணாக படைக்கப்படவில்லை என்பதை புரிந்து எம்மை நாமே முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் மனிதாபிமானத்தின் முதல் படி என நான் கருதுகிறேன். எங்களை சுற்றியுள்ள எதிர்மறை களை நாங்கள் சுவாசிக்க நேர்ந்தாலும் அவற்றை நேர்சீராக சுத்திகரித்து மற்றவர்களுக்கு வழங்கும் போது தான் நாங்கள் மனித சக்திகளை (சிந்தனைகள்) வசப்படுத்தும் வல்லமை கொண்டு செயற்படலாம்.



# ஒளிரும் தேசம்


**முஹம்மது இம்ரான் அஷ்ரஃப்**
**கிண்ணியா**



அடர்ந்த இரவு அது
ஆழ்ந்து உறங்கிவிட்டேன்,
பனிபடர்ந்த பிரதேசமாக இருக்கவேண்டும்
இல்லை பனி தேசமாகவும் இருக்கக்கூடும்
என்பதை என் உடல் உறைவிலிருந்து
உணரக் கிடைத்தது.
குளிரைக் குறைக்குமளவு என்னிடம்
சக்தியுமில்லை,
அதே குளிரை தடுக்குமளவு ஆடைகளும்
–இருக்கவில்லை.
அணிந்திருந்த துணிகளையே இழுத்து
மூடிக்கொண்டு
மெல்ல நகர்கிறேன்,
தூரத்தில் – ஒளிர்ந்து கொண்டிருந்த –
ஒளியினை நோக்கி...

நிலவின் தோன்றலாய் –
இருக்கவேண்டும் அன்றையதினம்,
கீறல் போன்ற பிறையொன்றை மட்டுமே
காணக் கிடைத்தது.
இருள் அடர்ந்திருந்தாலும்,
அங்கு செல்வதற்கான பாதையினை
என்னால் தெளிவாகவே காணமுடிந்தது.
நான் நடந்து செல்வதற்கென
யாரோ இந்த பாதையை அமைத்திருக்கக்கூடும்,
அல்லது பலரும் அந்த வழியே
அதே ஒளியை நோக்கி
நடந்ததினாலேயே அந்தப் பாதை
உண்டாகியிருக்க வேண்டும்.

நான் நடக்கையிலே
என் கால்கள் செல்லும் வேகத்திற்கேற்ப
அருகில் இருந்த காளான்கள் ஒளிரத் தொடங்கின.
வானம்பாடியாக இருக்கவேண்டும் –
எனக்கு வழித்துணையாக வந்தது,
அவை என் பயணத்தை சிரமமற்றதாக்கின.

ஆச்சர்யத்துடன் முன்னோக்கி நகர்கிறேன்
சற்று தொலைவைக் கடந்து தொடர்கையில்
எனக்கு நடந்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.
என்னை ஏற்றிச் செல்ல விசித்திர–
வாகனமொன்று தயாரானது,
வழுக்கும் தரையாக இருக்கக்கூடும்,
அவ்விடமிருந்து ஒரு நத்தையென்னை
சுமந்து செல்ல தயாரானது
ஏறி அமர்ந்த நான் உல்லாசமாய் நகரலானேன்...

பார்ப்பதற்கு பல இருந்தும்,



என்சிந்தை முழுதும் ஒளிர்ந்துகொண்டிருந்த–
அந்த ஒளியை நோக்கியே இருந்தது
சொற்பதூரம் கடக்கையிலே
நீர் நிலையொன்று குறுக்கிட
நத்தை வாகனத்தோடு
பயணத்தை தொடர முடியாமல் போயிற்று.

என்ன ஒரு ஆச்சர்யம்,
எங்கிருந்தோ ஒரு மீன் வந்தது,
எனையழைத்து அந்நீரிணையைக்
கடக்கும் சூட்சமத்தைக் கூறி
கண்ணாடிக் குவளையொன்றை கையில் தந்தது
அதனுள் என்னை ஏறி
அமர்ந்து கொள்ள பணித்தது,
நான் அமர்ந்தபின் அருகில் இருந்த
அன்னம் எனை அக்கரை சேர்த்தது,
அக்கரையடைந்ததும் இன்னும் ஆச்சரியமானேன்.

ஒளிர்ந்துகொண்டிருந்த ஒளியை அடைய
ஒரு ஏணியில் ஏறிச் செல்ல வேண்டியாயிற்று.
ஆனால் இங்கும் ஒரு அற்புதம்,
நான் அங்கு ஏணியில் ஏறிச் செல்லவில்லை,
மாறாக என்னை அங்கு ஏற்றிச் சென்றது.
பள பளக்கும் பளிங்கினாலான
வண்ணத்துப்பூச்சி என்னை
தூக்கிப் பறந்து சென்றது.

மேலே சென்றேன், மதி மயங்கிப் போனேன்,
அங்கே ஒரு தேசமிருந்தது,
இது வரை காணாத தேசமது
அருகில் நெருங்கியதும் தான் தெரிந்தது,
ஒளிர்ந்து கொண்டிருந்தது சிறு ஒளியல்ல,
ஒளிர்ந்தது அந்த தேசமே,
அது ஒளிரும் தேசம்
அது மின்மினிகளின் தேசம்
ஒட்டு மொத்த மின்மினிகளும்
ஒன்றாய் இணைந்து குதூகலித்துக்
கொண்டிருந்தன,
அவற்றின் ஒளிர்வில்
மிதமான கதகதப்பும் இருந்தது.
நான் தேடி வந்ததும் அந்த கதகதப்பை தானே...

அன்பால் வரவேற்கப்பட்டேன்
விருந்தினர் அறையில் அமர்த்தப்பட்டேன்.

என்னை அமர்த்திய அறையில்
நட்சத்திரங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன,
அமர்வதற்கு வழங்கப்பட்ட–
பறவையின் இறகுகளிலான
இருக்கையின் மென்மையை மென்மேலும்
மென்மையாக்கியது விரிக்கப் பட்டிருந்த
மேகத்துண்டுகளும் நிறைந்து கிடந்த பூக்களும்...

என்வருகையால் அவர்கள் மகிழ்ந்ததாகவும்,
அவர்களின் மகிழ்வினை கொண்டாட
விழா கொண்டாட உள்ளதாகவும்
அவ்விழாவிற்கு என்னைக் கலந்து
கொள்ளுமாறும்
அறிவிப்புக் கிடைக்கப் பெற்றது.

நான் தயாரான சமயம்
எங்கிருந்தோ சிறு தூறல் மழை
பனி தேசம் கரையாத தொடங்கியது,
ஒளிரும் தேசம் இருளத் தொடங்கியது,
பொழுதும் புலரத் தொடங்கியது,
என் அன்பு அன்னை தெளித்த நீரினால்
என் கனவும் கலையத் தொடங்கியது.

கலைந்த கனவின் கலக்கத்தில் தூங்கினால்
தூக்கம்தான் வருமா?
தூக்கம்தான் வந்தாலும் கலைந்த
கனவின் மிகுதிதான் தொடருமா?
அங்ஙனம் கனவு தொடர்ந்தாலும்,
ஒளிரும் உலகில் சேர்ந்திடத்தான் முடியுமா?
இல்லை, அங்கு வாழ்ந்திடத்தான் கிடைக்குமா?



# ஒரு உரிமைச் சலசலப்பு...

வானம்பாடி முஜா
நிந்தவூர்.

உறவுகள் நழிந்து போக
சேறும் சகதியுமாய்
கொட்டுண்டு கிடக்கின்றது
என் தேசத்து ஒற்றுமை

ஆள வந்தவர்களின்
பாகப்பிரிவினைகள்
கோணல்களைத்
தோற்றுவிக்க
நேயங்கள் எல்லாம்
நோய்வாய்ப்பட்டபடி...

துயர நிழல் வீசும்
நாட்டிலே
எழுப்பப்படும்
உரிமைச்  சலசலப்புக்கள்
வன்மத்தின்
குறியீடுகளாகக் காட்சிப்படுத்தப்பட

கிழிந்தும் தைத்தும்
ஊசலாடியபடி
விடுக்கப்படும்
வெள்ளை அறிக்கைகள்
வன்முறைகளென பரிந்துரைக்கப்பட்டு

கனவுக் கைகளைத் தறித்து
அழுக்குப் பொதிகளை
பரிசளிக்கும்
ஆதிக்கத்தின்
கொடுங்கைகள்

நெஞ்சு நிமிர்த்துபவன்
மேல்
குற்ற முகம் தேடி
அறையும்
அடையாளக் கோடுகளைக்
கண்டும்

மண்டியிட
முடியாதவர்களாய்
இப்போதும் நாங்கள்
தடுக்கி விழுந்த
சுதந்திரம் தேடும்
ஜனநாயக
கண்களைத் தேடியபடி



# எதுவும் கடந்து போகும்

சுஹைலா ரிஸ்வான்..

கடந்து விட்டு நகர்ந்துவிட வேண்டியது தான்.. வாழ்க்கைப்பயணத்தில் எத்தனை உறவுகளை கடந்து வருகின்றோம். அத்தனையும் நிலையானதா.. இல்லை..

சிலநேரம் அவர்கள் மறக்க முடியாத நினைவுகளை தந்துவிட்டுச் சென்றிருப்பர். இன்னும் சிலர் வலிகளை வலிக்காமல் தந்து கடந்திருப்பர். வலி தந்த உறவுகள் கூட இன்றும் எம் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பர். அதற்குக் காரணம் அவர்களது நல்ல உறவு மட்டுமே..

உறவுகளின் அருமையை உணர வைத்திடும் வாழ்க்கை அதே உறவுகளின் சுயரூபத்தையும் உணர வைக்கும். அதுதான் நியாயம் அதுதான் யதார்த்தம். ஆனால் இதுவரை நாம் அவர்கள் மீது வைத்திருந்த அன்பு, நம்பிக்கை என்பவற்றின் உச்சம் எண்ணி கண் வழியே கண்ணீர் சிந்தி நம்மை நாமே வருத்திக் கொள்ள வேண்டியதில்லை...

எம்மோடு இறுதி வரை நிலைக்க வேண்டிய உறவுகள் இறுதி வரை இருக்கும் என்பதே உண்மை. எனக்கு துரோகம் செய்துவிட்டார்கள் நம்பிக்கை மோசடி செய்து விட்டார்கள் என்று அங்கலாய்க்க வேண்டிய தேவையில்லை. அதனை நாம் ஒரு அனுபவப்பாடமாக எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் எம்மோடு இருக்கத் தகுதியற்றவர்கள் என்றெண்ணி வாழ்க்கையை கடந்து போக வேண்டியதுதான்.

காலத்தை யாருக்காகவும் நிறுத்திவைக்க முடியாது. சென்ற காலத்தை மீட்டியெடுக்கவும் முடியாது. அது ஓடிக்கொண்டே இருக்கும் அதனோடு நாமும் ஓடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆகவே மகிழ்வு ஏற்பட்டால் மகிழ்ச்சியாக இருப்போம். துன்பம் ஏற்பட்டால் அதற்காக நம்மை நாமே தண்டிக்கத் தேவையில்லை..

எதுவும் கடந்து போகும்.
கடந்து விட்டு நகர்ந்து விட வேண்டியதுதான்...



# தன்னம்பிக்கை

இது என்னை நானே
மீட்டெடுக்க எனக்காக
நானெழுதிய என்வரி
கருங்கல் பூமியிலே
காளையேன்ன புகைச்சாலும்

வேரோடு பூமி கிழித்து
வெளி வருவேன் வீரு கொண்டு
காலஉளி என்னை தாக்கி
கண்டம் துண்டமா சிதைச்சாலும்

சிதைந்து போன சில்லில் கூட
சீர் பெறுவேன் சிலை என்று
படைத்த இறைவனுக்கே
பாவமிது தெரியலியோ

ஆலப்புதைத்த விதைக்கே
ஆயுள் பலம் அதிகம் என்று
காட்டாற்று வெல்லத்தை
கட்டுமரம் தடுக்குமா

காலனுக்கே காலன் நாள்
காலம் உயிர் எடுக்குமோ
ஊதி அணைப்பதற்கு
ஊதிபத்தி இல்லை நான்

ஏல் கடல் நீரால் கூட
அணைக்க முடியா எரிமலை நான்
இமயம் தலைகுனிந்து
நிட்குமளவு உயரப்போகிறேன்

இறப்பில்லா மனிதநான்தான்
இறுதியில் நான் உயரப்
போகிறேன்.

நாகூர் பாத்திமா அஃஷபா
ஏறாவூர்



# தினசரி விலையேற்றமும் திணறிப் போகும் மக்களும்

கடைகளில் மக்கள்
தினம் வரிசையில்
திடீரென மறையும்
தினசரி பொருட்கள்

புடைசூழும் ஏழ்மை
புலம்பியழும் வயிறு
பால்மா எங்குமில்லை
பரிதவிக்கும் குழந்தைகள்

கட்டற்ற விலையேற்றம்
மிதக்கும் வியாபாரிகள்
உழைப்பின்றி கலங்கும்
கூலித் தொழிலாளிகள்

கதறி அழுதும்
கரையாத சோகங்கள்
நிலை குலைந்து
நரகமாகும் வாழ்க்கை



தௌபீக் முஹம்மது நவீத்
புல்மோட்டை.



## அற்புதம் நிறைந்த இவ்வுலகில் அற்புதமான ஒரு குழந்தை

# சாரா ஹானி

## வெறுமனே 2 வயதில் அதீத திறமையா?

மாவனல்லை பிரதேசத்தை சேர்ந்த ஒன்றரை வயதான சாரா ஹானி நௌபல் தான் அந்த புத்திசாலிக் குழந்தை. இப்பொழுது தான் தட்டுத் தடுமாறி எழுந்து நிற்கும் இவர் பொக்கை வாயினால் அம்மா அப்பா....என பேச ஆரம்பித்திருக்கிறார். ஆனால் அவரின் ஞாபகசக்தியும் அறிவுக்கூர்மையும் எம்மை பிரம்மிக்க வைக்கிறது. இத்தனை சிறிய வயதில் 150 இற்கும் மேற்பட்ட பொருட்களையும் நாட்டுத் தலைவர்களையும் சரியாக அடையாளங்காட்டுகிறார் சாரா. இதெல்லாம் பெரிய விஷயமா !! எங்கள் குழந்தைகளும் தான் படங்களைக் காட்டினால் சரியாக சொல்லும் என சில பெற்றோர் நினைக்கலாம். ஆனால் ஏனைய குழந்தைகளிடம் இல்லாத புத்திசாலித்தனமும் ஞாபகசக்தியும் அதீதமான அளவிலேயே சாரா ஹானியிடம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

5 வருட கடும் தவத்தின் பின்னரே நௌபல் ஹாசிம் மற்றும் சிப்னா ஹாரிஸ் தம்பதிக்கு சாரா ஹானி எனும் குட்டி தேவதையை இறைவன் அருட்கொடையாக கொடுத்திருக்கிறான். நீண்ட காலத்தின் பின்னர் கிடைக்கும் முதல் குழந்தைக்கு தாயின் கவனிப்பு மிக அதிகமாகத் தான் இருக்கும். ஆனால் அவளோ தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை பற்றி மாறுபட்ட எண்ணத்துடன் சில முன்னேற்பாடுகளை செய்தாள் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும்.

“என் குட்டி தேவதையின் வருகையை நான் மிக ஆவலாக எதிர்பார்த்திருந்தேன். எல்லா குழந்தைகளையும் போலன்றி மாற்றமான குழந்தையாக அவள் இருக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். அதற்காக அவள் வயிற்றில் இருக்கையிலே பல விடயங்களை செய்தேன். இதனை சிலர் கேலி செய்தார்கள். சிலர் மூடப்பழக்கம் என விமர்சித்தார்கள். ஆனால் புத்திசாலியான குழந்தையொன்றை வரவேற்க நான் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டே இருந்தேன்“ என்று கூறிய சாராவின் தாயார் சிப்னா, தனது குழந்தையின் இரகசியங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். குழந்தை வயிற்றில் இருக்கையில் சிறந்த நூல்களை வாசிப்பதும், போசாக்கான உணவுகளை சாப்பிடுவதும், வீண் விடயங்களில் நேரத்தை செலவிடுவதைத் தவிர்ப்பதும், புத்திசாலியான அறிவுமிக்க குழந்தை உருவாக அடித்தளமாக அமையும் என ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

“சாரா வயிற்றில் இருக்கையில் ஆரோக்கியமான உணவுகளையும், பழங்களையும் அதிகம் சாப்பிட்டு வந்தேன். புத்திசாலிக் குழந்தைகளைப் பெற தாய்மார் செய்த செயல்கள் பற்றிய தகவல்களை தேடிப் பார்த்தேன். புத்தகங்கள் வாசித்ததோடு சமய விடயங்களிலும் அதிக ஈடுபாடு காட்டினேன். தொலைக்காட்சி பார்ப்பதையும் முடிந்தளவு தவிர்த்தேன். திறந்த வெளியில் குழந்தைக்காக பிரார்த்தனை செய்யவும் தவறவில்லை“ என்றார் சாராவின் தாயார்.

2018 மே மாதம் 28 தான் சாரா இந்த உலகை எட்டிப்பார்த்த நாளாகும். பாட்டியின் பெயரைத் தான் செல்லமாக அவளுக்கு சூட்டி அழகு பார்த்துள்ளனர். தான் எதிர்பார்த்தது போல புத்திசாலிக் குழந்தையொன்றை கடவுள் தந்த நம்பிக்கையில்

ஏனைய தாய்மார்கள் செய்யாதவற்றையெல்லாம் சாராவுக்காக செய்திருக்கிறார் தாய் சிப்னா. "சாரா பிறந்த மறுநாள் முதலே அவளுடன் பேசவும் அவள் காதில் "துஆ" (பிரார்த்தனை)களை சொல்லவும் ஆரம்பித்தேன். அவளும் அசையாமல் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பாள். பிள்ளை பிறந்தால் சில தாய்மாருக்கு ஏற்படும் மனநோய் என தாதிமாரும் மற்றவர்களும் நினைத்தாலும் நான் அவளுடன் பேசுவதை அறிவூட்டுவதை நிறுத்தவில்லை" என்றார் சாராவின் தாயார். ஏனைய குழந்தைகள் போல தடுப் பூசி ஏற்றினால் வீறிட்டு அழ மாட்டாளாம் சாரா. 8 மாதத்திலேயே தனியாக மாடிப்படிகளில் ஏறி இறங்கவும் தொடங்கிவிட்டாளாம் சாரா.

சாராவுக்கு 8 மாதம் இருக்கையில் அவளுக்காகப் பல்வேறு நாடுகளில் இருந்தும் வாங்கிய புத்தகங்கள், பட அட்டைகள் என்பவற்றைக் கையில் கொடுத்தார்களாம் அவர்களின் பெற்றோர். சில பழங்களைக் காட்டி அவற்றின் பெயர்களையும் சொல்லியிருக்கிறார் தாயார். ஓரிரு நாட்களில் அவளாக படத்தில் உள்ளவற்றை சரியாக அடையாளங் காட்ட ஆரம்பித்தாளாம். இப்படி விளையாட்டாக ஆரம்பித்து ஒன்றரை வருடம் ஆகும் போது பழங்கள், மரக்கறிகள், வீட்டில் பயன்படுத்தும் பொருட்கள் மிருகங்கள், பறவைகள், நாட்டுக் கொடிகள், வாகனங்கள் என பலதையும் சரியாகக் காட்டுகிறார் சாரா.

இந்தியாவின் தமிழ் நாட்டை சேர்ந்த 21 மாதக் குழந்தையொன்று இவ்வாறு தனது திறமையைக் காட்டுவதாக யூடியுபில் பதிவேற்றப்பட்டுள்ளது. அந்தக் குழந்தை 140 பட அட்டைகளைத் துல்லியமாக அடையாளங் காட்டுவதோடு வேறு நாடுகளை சேர்ந்த குழந்தைகளும் இவ்வாறு பிரமிப்பூட்டும் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளன என்பது அபூர்வபமானது. "இந்த சாதனைகளை முறியடித்து சாரா 150 ற்கும் மேற்பட்ட பட அட்டைகளை சரியாகக் காட்டுகிறார். இதனை நாம் யூடியுபில் பதிவேற்றிய நிலையில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் அதனை சில நாட்களிலே பார்வையிட்டுள்ளனர்" என சாராவின் தாய்பெருமையாகக் கூறுகிறார்.

தற்பொழுது நாட்டுத் தலைவர்களையும் அடையாளங்காட்ட ஆரம்பித்திருக்கிறார் சாரா. ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த, முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மற்றும் பாரதியார், அன்னை தெரேசா என முக்கியமானவர்களின் பெயர்களை சொன்னால் அதனைத் துல்லியமாகக் காட்டி விடுகிறாராம் குறும்புக் குழந்தை சாரா. "இந்த நிலையில் மேலும் சில தலைவர்களையும், உலக வரைபடத்திலுள்ள நாடுகளையும், மேலும் சில நாடுகளையும்,



இலங்கையிலுள்ள மாகாணங்கள், மாவட்டங்கள் என்பவற்றையும் காண்பித்து வருகிறேன்" என்கிறார் சாராவின் தாய். சிறிய மூளைக்கு அதிகம் சுமையேற்றுவது அதன் எதிர்காலத்தை பாதிக்காதா !! என சிலர் யோசிப்பது புரிகிறது.

அதனைப் பற்றியும் சாராவின் தாயிடம் கேட்டேன். "நானாக எதனையும் திணிப்பதில்லை. பட அட்டைகளைக் காட்டி நான் கேள்வி கேட்பதை அவள் மிகவும் விரும்புகிறாள். எங்காவது பத்திரிகைத் துண்டையோ புத்தகத்தையோ கண்டால் என்னிடம் தந்து கேள்வி கேட்கச் சொல்வார். அத்தோடு மகளின் அதீத திறமை பற்றி நிபுணத்துவ மருத்துவர் முஸ்தபா ரயிஸை சந்தித்துப் பேசி அவரின் மருத்துவ ஆலோசனையையும் பெற்றுள்ளேன் என்று விளக்கமளித்தார் சிப்னா.

இதே வயதுடைய ஏனைய குழந்தைகளிடம் இல்லாத கவனமும் நிதானமும் தாயின் உணர்வறிந்து நடக்கும் பக்குவமும் இந்த ஒருவருடமும் 8 மாதமும் நிறைந்த சாரா ஹானியிடம் நிறையவே இருக்கிறது. எதிர்காலத்தில் பெண் அப்துல் கலாமொருவர் உருவாக சாரா ஹானியை வாழ்த்துவோம்.

வாழ்த்துக்கள் எம் தீபகற்பத்தின் கரு உருவே சாரா ஹானி இவ்வாறே உலகளவில் மிளிர்ந்து செல்ல இறைவனின் துணை என்றென்றும் உமக்கு உரித்தாகட்டும் குட்டி தேவதையே...

**அஸீர் அஸ்ரா பானு**



# கொரோனாவை விட தீயாய் பரவும் கொடிய உளவியல் நோய்..!

கட்டுரையாளர்:
எ.றொஸான் முஹம்மட்

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக உலகத்தையே ஆக்கிரமித்து, அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஊழனைன–19 கொரோனா நோய் நமது சமூகத்துக்கு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வயோதிபர்கள் முதல் பச்சிளம் குழந்தைகள் வரை சகலருக்கும் பாதிப்பை ஏற்படுத்திய ஒரே ஒரு நோயாக உலகளாவியரீதியில் இந்நோய் பார்க்கப்படுகிறது. இத் தொற்று நோயைவிட மிகப் பெரும் உளவியல் ரீதியான நோய் ஒன்று சமூகத்தினுள் உள்ளது என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்..?

ஒரு நோய் பற்றிய அச்சம் அந்த நோயை விட மிகக்கூடுதலாக எம்மில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு நோயாளி அந்த நோய்க்கான சிகிச்சையினை வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கும் போது தனது உள்ளத்தினை சரியாக சீர் செய்ய வேண்டி உள்ளது. அதிலும் குறிப்பாக இத் தொற்றுநோய் பற்றிய செய்திகள் வானொலி, தொலைக்காட்சிகளில் மாத்திரமன்றி சமூக ஊடகங்களிலும் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் கொரோனா பற்றிய செய்திகள் நிரம்பி வழிகின்றன, தொலைக்காட்சியிலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மனிதன் சமூக ஊடகங்கள் இல்லாமல் வாழ்வது மிக அரிது என்ற சூழலில் சமூக ஊடகங்கள் இந்தச் செய்தியை மிகப்பெரும் பூதாகாரமாக வழங்குகின்ற போது இதுவும் உளவியல் ரீதியாக மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

கொவிட் தொடர்பான நோயாளர்களின் எண்ணிக்கை, மரண எண்ணிக்கை உள்ளிட்ட விடயங்கள் சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன பொது மக்கள் மிகப் பெரும் அச்சத்தை எதிர்கொள்கின்றனர். அம்பியூலன்ஸ் வாகனங்களின் சத்தங்களைக் கேட்டால் ஒருவித அச்சம், PCR மேற்கொள்ளும் நபர்களின் ஆடைகளை கண்டால் ஒருவித அச்சம், முப்படையினர்களை கண்டால் அதிலும் ஒருவித அச்சம், பொதுஇடத்தில் பக்கத்தில் இருப்பவர் தும்மினால் இருமினால் அவரிடமிருந்து எமக்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்பட்டிருக்குமா என்கின்ற அச்சம், பொது இடத்தில் ஒரு பொருளை அல்லது ஒரு இடத்தை கைகளால் தடவினால் இந்த இடத்தின் மூலமாக தொற்றி இருக்குமா என்கின்ற அச்சம் இவ்வாறு கொரோனா நோயைவிட உளவியல்ரீதியாக அச்சப்படுகின்ற நிலைமை மாறி உள்ளது.

மேலும் சமூக வலைத்தள பயன்பாட்டாளர்கள் போலி செய்திகள், பொய்யான தகவல்கள், ஆதாரமற்ற கருத்துக்கள், என்பவற்றை பரப்புகிறார்கள். அதுமாத்திரமன்றி காலம் தாமதித்து பரப்பப்படும் செய்திகள் மூலமாகவும் மக்கள் அச்சப்படுகின்ற நிலைமை காணப்படுகிறது. இவ் விடயமும் உளவியல் ரீதியாக மனநிலையில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
இக் கொரோனா நோயினால் ஒரு மனிதன் உடல் ரீதியாக பாதிப்படைவதை விட உளவியல் ரீதியாக மிகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறான்.

தொடரும்...




# அகில இலங்கை ரீதியில் 2 விருதுகள் பெற்று நிந்தவூர் மாணவன் சாதனை!

2020ம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் விருது போட்டியில் அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தின் சார்பாக பங்குபற்றிய இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் பொறியியல் முகாமைத்துவ பீடத்தில் கடல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ துறையில் முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவன், ஹஸன் குத்தூஸ் முஹம்மட் ஜெம்ஷித் ஹஸன் தமிழ் மொழி மூலத்தில் தான் பங்கு பற்றிய சிறுகதை மற்றும் கவிதை ஆகிய 2 போட்டிகளிலும் மாவட்டம், மாகாணம் மற்றும் அகில இலங்கை ரீதியில்முதலாம் இடங்களைப் பெற்று அம்பாறை மாவட்டத்தினதும், எமது நிந்தவூர் மண்ணினதும் நாமத்தையும் ஒலிக்கச்செய்துள்ளார்.

இந்த ஆண்டின் இளைஞர் சேவை மன்றத்தின் தமிழ்மொழி மூலமான இரண்டு விருதுகளை பெறும் ஒரே மாணவன் இவராவார். இவர் பாடசாலைக் காலங்களிலிருந்து கலை,கலாச்சார போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பல விருதுகளை பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவருக்கான விருது வழங்கல் நிகழ்வு 26ம் திகதி கொழும்பு நெலும் பொக்குனவில் நடைபெற்றது.
இவரை எமது ஸ்கை தமிழ் சார்பாக வாழ்த்துகிறோம்.





துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 17 | 05 டிசம்பர் 2021



## Ceylon Talk Youtube Channel
### பிரதம நிர்வாகி மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர்

# சஹானா மதுசூதன்

### அவர்களுடனான நேர்காணல்

**கேள்வி 01**

### உங்களது பூர்வீகம் ( பிறப்பிடம்) , கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?

எனது பெயர் சஹானா மைதிலி. அனைவருக்கும் சஹானா மதுசூதன் என்ற பெயரை குறிப்பிட்டாலே இலகுவாக தெரிந்து கொள்வார்கள். நான் பிறந்தது, வளர்ந்தது, கல்வி கற்றது, தொழில் புரிந்தது அனைத்துமே சென்னையில் தான். சென்னையில் அனகாபுத்தூர் என்ற நகரத்தில் பிறந்தேன். சிறு வயதில் 'Anakaputhur higher secondary' பாடசாலையில் கல்வி கற்றேன். எப்போதும் மிகவும் குறும்புத்தனமாக துரு துரு என்று இருப்பேன். பாடசாலையில் தண்டனைகள் என்றால் முதலில் நானே இருப்பேன். அப்படியான ஒரு சுட்டித் தனமான பெண்ணாக இருந்தேன்.

கற்றல் நடவடிக்கைகளில் எல்லாம் அதிகம் ஈடுபட மாட்டேன். பதினொராம் தரம், பன்னிரண்டாம் தரம் அதற்கு பின்னரான காலப் பகுதியிலே கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வம் என்னுள் எழுந்தது அப்போது தான் நன்றாக கற்க தொடங்கி பட்டப் படிப்பையும் பூர்த்தி செய்தேன். பட்டப் படிப்பினை Degree. BCom. Quaide millet college, madras university இல் முடித்தேன்.



நேர்காணல்
பாதிமா முனீரா



## கேள்வி 02

### உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்?

குடும்பப் பின்னணி எனும் போது என்னுடைய குடும்பம் மிகவும் சிறிய குடும்பம். அம்மா, அப்பா, நான் உட்பட ஒரு சகோதரன். அப்பா தையல் வேலை புரிபவர். அம்மா “லெதர்“ கம்பனி ஒன்றில் cutting master ஆக வேலை புரிந்தார் 2000 ஆம் ஆண்டு வரை. அதன் பிறகு வீட்டிலே தங்கி விட்டார்கள். என்னையும், சகோதரனையும் கல்வி கற்கும் பணியில் ஈடுபடுத்தினார்கள்.

இப்போது குடும்பம் என்று சொல்லும் போது எனக்கு திருமணமாகி விட்டது. நான், கணவன் இரண்டு அழகான பிள்ளைகள். ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம். சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## கேள்வி 03

### உங்களது தொழில் அனுபவங்களை பற்றி பகிர்ந்து கொள்வீர்களா?

தொழில் அனுபவங்கள் எனும் போது முதல் தொழிலாக 11th annual school leave (Super auto forge limited) - QC checker ஆக கடமை புரிந்துள்ளேன்.

பிறகு 12th leave (leather factory) - supervisor During degree. Supermarket - Billing First job after degree telecalling ICICI prudential, then admin, hr, receptionist, software trainer. இவ்வாறாக பல தொழில் அனுபவங்களைப் பெற்றுள்ளேன்.





## கேள்வி 04

## உங்களை ஊடகத்துறை வர தூண்டிய விஷேட காரணங்கள் யாவை? Ceylon Talk ஆரம்பம் பற்றி குறிப்பிடுங்கள்?

ஊடகத்துறையில் கால் பதிக்க வேண்டுமென்று சிறு வயதிலிருந்தே என்னிடம் ஆசையிருந்தது. நடனம் எனக்கு மிகவும் விருப்பமான கலை. நடனம் ஆடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் எப்பொழுதாவது என்னுடைய நடனம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட வேண்டுமென்றெல்லாம் சிந்திப்பேன். பட்டப் படிப்பை கற்றுக் கொண்டிருக்கும் தருணத்தில் அதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. கல்லூரியினூடாக பல நிகழ்ச்சிகளில் பங்கு பெற முடிந்தது.

அவை எல்லாம் எனக்கு மிகவும் புத்துணர்ச்சியை பெற்றுத் தந்தது. அவ்வாறே படித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் SS Music channel இல் என்னுடைய நடனம் ஒளிபரப்பாகியது. அதற்கு பிறகு Raj Tv யில் தொடர் நடன நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றினேன். எனினும் அதில் தொடர்ந்தும் நான் பயணிக்கவில்லை. அதற்கு பிறகு தொழில் புரிந்து கொண்டிருக்கும் நேரத்தில் Zee Tamil இல் இருந்து எனக்கு சில நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறே ஊடகத்துறைக்குள் என் பயணம் ஆரம்பித்திருந்தது. அதன் பிறகு வாய்ப்புக்கள் வரத் தொடங்கின. அதன் பிறகு திருமணம் புரிவதற்காக ஸ்ரீலங்காவை வந்தடைந்தேன்.

அதன் பிறகு ஊடகத்துறை கனவே இல்லாது போனது. ஸ்ரீலங்காவில் நான் மீடியா வில் இணைவேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. நான் எனக்குள்ளே ஒரு கனவை வைத்திருந்தேன். என்னைப் பற்றி பத்திரிகையில் வர வேண்டும், ஆக்கங்கள் எழுதப்பட வேண்டுமென்பதே அதுவாகும்.

அது நானாக திருமணத்திற்குப் பின் உருவாக்கிக் கொண்ட ஒரு கனவென்று கூறலாம். இப் பொழுது அது நனவானது Ceylon talk இனூடாக தான். Ceylon talk எவ்வாறு ஆரம்பித்தோம் என்று சொன்னால் என்னை நானே இன்னும் ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில், என்னை வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் குடும்பத்தில் சிறு பிரச்சினையொன்று ஏற்படும் சந்தர்ப்பத்திலே Ceylon talk இனை ஆரம்பித்தேன்.

இதனை ஆரம்பித்ததற்கு பிறகு ஊடகத்துறையில் என் கனவுகள் நிறைவேறிக் கொண்டிருக்கிறது இது ஆரம்பம் தான். இன்னும் நிறையவே பணிகள் செய்ய வேண்டி இருக்கிறது.










**கேள்வி 05**

## Ceylon Talk பற்றி சற்று விரிவாக குறிப்பிட முடியுமா?


Ceylon talk ஆரம்பிக்கும் போதே இவ்வாறு தான் இருக்க வேண்டுமென முன் கூட்டியே முடிவு செய்தோம். அதாவது கேள்விகள் கேட்க கூடாது, நேர்காணல்கள் இடம் பெறக் கூடாது. அவர்கள் அவர்களாகவே அவர்களின் வாழ்க்கை பயணத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அவர்களுடைய வாழ்வில் நடந்த பல சம்பவங்களை பகிர்ந்து கொள்வார்கள் என்ற நோக்கில் நாம் கேள்விகள் கேட்க மாட்டோம். இதனால் பலர் எம்மிடம் கூறிய விடயம் தான் தங்களுடைய பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்தாக இருந்தென்று.

முதலில் நான் Ceylon talk இனூடாக தொடர்பு கொண்டு பேசிய நபர் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள மறுத்த போதும், அச் சமயம் எனது உற்ற தோழியான சஹானாவின் உதவியுடன் முதல் படம் எடுக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் சஹானாவிற்கு மிகுந்த நன்றிகளை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். அவ்வாறே தொடர்பு கொண்டதுமே மறுக்காது அனுபவங்களை பகிர்ந்த International award winner அழகியல் நிபுணர் நயகரா கயல் அவர்களுக்கும் மிக்க நன்றிகளை தெரிவிக்கிறேன். அன்றே இன்னொரு படப் பிடிப்பையும் நடாத்தினோம் ஊடகவியலாளர் தில்ஷான் தாலிப் அவர்களும் அனுபவங்களை பகிர்ந்து ஒத்துழைத்தார். இவர்கள் இருவருக்கும் முதற் கண் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். மற்றும் இன்னொரு நபரை முக்கியமாக குறிப்பிட வேண்டும்.

அவர் தான் ரினோஸா. அவர் நான் அழைத்ததுமே வருவதாக சொன்னார். அதன் பிறகு அவருடைய பேச்சைக் கேட்டு பலர் மகிழ்ந்தார்கள். ஏற்றுக் கொண்டார்கள். இந்நேரத்தில் அவருக்கு மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு பிறகு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப் போகிறேன் என்று கணவனிடம் உரையாடிய பின்பு நான் கூறிய நபர் என்னுடைய புகைப்பட பிடிப்பாளர், கணவருடைய நண்பர் விஜித குமார் அவர்கள்.

அவர் தான் எங்கள் காணொளிகளை சிறப்பான முறையில் படம் பிடித்து வடிவமைத்து தருகிறார். அதுவல்லாது மூவரை நான் ஞாபகப்படுத்தியே ஆக வேண்டும். என்னுடைய கணவர் தான் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கி, செலவுகளையும் பொறுப்பேற்று வருகிறார். அதற்கு அவருக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் ஈடாகாது. அடுத்து என்னுடைய இரு குழந்தைகளும் தான். இவர்கள் அனைவருக்குமே என் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## கேள்வி 06

# உங்களுக்கு வேறு துறைகளில் ஏதாவது ஈடுபாடு உண்டா?

வேறு துறைகளில் ஆர்வம் எனும் போது தொழில் நுட்ப ரீதியாக நிறைய தகவல்களை அறிந்து வைத்திருக்கிறேன். அவற்றை தேடுவதில் மிகுந்த ஆர்வமுண்டு புதிய விடயங்களை தேடிக் கொண்டே இருப்பேன். எவையெல்லாம் தொழில் நுட்ப ரீதியாக முன்னேறி வருகிறது என்பவற்றையெல்லாம் ஆராய்வேன். எனக்கு இப்போது Editing work இல் ஈடுபடுவது அதிக விருப்பமாக இருக்கிறது. நான் தொழில் ரீதியாக தொகுப்பாக்கும் வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறேன். ஊநலடழபெ வயடம காணொளிகளை நானாகவே வடிவமைப்பேன்.

இதுவன்றி சில youtube channel இற்கு வடிவமைப்பு வேலைகளை செய்து கொடுக்கிறேன். அதே போல கணவருடைய அலுவலகத்திலும் அவருடைய பணிகளுக்கு உதவி செய்வேன். கணக்காளர் வேலைகளாக இருக்கட்டும்,அதே போல நிர்வாக பொறுப்பு வேலைகள் அனைத்தையும் செய்து கொடுப்பேன். மற்றும் Art and craft செய்வேன். தேவையானவர்களுக்கு செய்து கொடுப்பேன்.

Hand make product கள் நிறையவே செய்வேன். Wall, Frame, mural போன்ற கலை வேலைகளை நன்றாகவே செய்வேன். திருமண வைபவங்களுக்கான பரிசுப் பொருட்களை செய்து கொடுத்துருக்கிறேன். களிமண்ணால் இசை பொருட்களை செய்து கொடுத்து இருக்கிறேன். அதே போல youtube வலைதளத்திலும் craft வேலைகளை மற்றவர்களுக்கு கற்றும் கொடுத்தேன். இப்போது நேரமின்மையின் காரணமாக விட்டு விட்டேன். அதே போல Online வியாபாரம் செய்கிறேன். இவ்வாறு பல்வேறுபட்ட துறைகளிலும் ஈடுபடுவதில் ஆர்வமாக செயற்படுகிறேன்.



## கேள்வி 07

### உங்களின் சேவைகளை பாராட்டி விருதுகள் கிடைத்துள்ளனவா?

சேவைகளை பாராட்டி விருதுகள் எனும் போது நான் தொழில் புரியும் சந்தர்ப்பமொன்றில் Best Employee Award என்று ஒரு விருது கிடைக்கவிருந்தது. அதை வாங்குவதற்கு முன்பாகவே நான் அதிலிருந்து வெளியேறி, வேறு கம்பனிக்கு மாறி விட்டேன்.

அதனால் அதனை பெற முடியவில்லை. அதற்கு பிறகு வேறு எதுவும் விருதுகள் என்று கிடைத்ததில்லை. இனி வரும் காலங்களில் முயற்ச்சிக்கிறேன் பார்க்கலாம்.

## கேள்வி 08

### உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுங்கள்?

வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் என்றால் நிறையவே இருக்கிறது. முக்கியமாக குறிப்பிடுவதானால் சமீபத்தில் அப்பாவின் மரணம். அது யாருமே எதிர்பார்க்காத ஒரு விடயம். கொரோனா தொற்றின் காரணமாக அப்பா காலமானார். நான் ஸ்ரீலங்காவில் இருந்ததினால் காலசூழ் நிலையால் செல்ல முடியாது போனது.

எப்போதுமே நான் இந்தியாவிற்கு செல்லும் போது அப்பாவையே முதலில் பார்ப்பேன். இனி பார்க்கவே முடியாதுள்ளது என்று நினைத்தால் மிகுந்த கவலையாக இருக்கிறது. பெண் பிள்ளைகளுக்கு உயிர் அப்பா தானே.

## கேள்வி 09

### இந்த நேர்காணலூடாக விஷேடமாகக் கூற விரும்பும் செய்தி என்ன?

விஷேடமாகக் கூறுவதற்கு சில விடயங்கள் இருக்கின்றன. ஒன்று ஏதாவது ஒரு திறமை எம்மிடம் இருக்கும் போது அதனூடாக நாம் பிறருக்கு இலவசமாக செய்து கொடுக்க வேண்டுமென சிலர் எதிர்பார்ப்பார்கள். எனினும் நாம் ஒரு பொருளை மற்றவரது தேவை நிமித்தம் செய்து கொடுக்கும் சந்தர்ப்பத்தில் செலவு செய்து கூட சில பொருட்களை வாங்குவோம். அதற்குரிய மீள் தொகையை அவர்கள் வழங்க மாட்டார்கள். அது ஒரு தவறான விடயமாகும். காரணம் நாம் எமது நேரத்தை செலவிடுகிறோம். திறமையினூடாக உழைக்கிறோம்.

நான் இவ்வாறான சிலரால் ஏமாற்றப்பட்டுள்ளேன். ஆகவே அவ்வாறு செய்வதனை தவிர்ந்து கொள்ளுதல் சிறந்தது. அது தவறான விடயமாகும். மற்றொரு விஷேட அம்சமென்றால் இன்னும் சிலரிடம் திறமை இருக்கும் ஆனால் அதனை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாமல் இருக்கும். நீங்கள் திருமணமான பெண்ணாக இருந்தால் முதலில் கணவனுடன் உரையாடி அனுமதி கோரி அதற்குரிய திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள். அதே போன்று திறமைகளை வெளிப்படுத்த முடியாமைக்கு பிள்ளைகளை காரணம் கூறாதீர்கள்.

அது எல்லாம் சில காரணங்கள் தான். நாம் செய்வதற்கு நினைத்தால் எவ்வாறும் செய்யலாம். நானும் இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டே இவை எல்லாவற்றையும் செய்கிறேன். அதே போல உங்களுக்கான அடையாளத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பெண்களை பொறுத்தவரை திருமணத்திற்கு பின்னர் வாழ்க்கையில் அனைத்தும் கிடைத்து விட்டதாக எண்ண முடியாது. ஆகவே உங்களுக்கான நேரத்தை ஒதுக்கி உங்களுக்கான களங்களை அமைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். குழந்தைகள் கூட வளரும் வரை தான் நம்முடன் இருக்கப் போகிறார்கள்.



இவ்வுலகில் எதுவும் நிரந்தரம் இல்லை. நம் வாழ்க்கையை நாம் வாழ்ந்ததாக இருக்க வேண்டும். ஏனோ தானோ என்று பத்தோடு பதினொன்றாக இருந்து விட்டு போகக் கூடாது. எமக்கான அடையாளத்தை நாம் தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த விடயம் எதிர்பார்ப்புக்கள் குவிந்திருக்கும் சந்தர்ப்பங்களில் அவைகள் ஏமாற்றங்களாகும் போது நாம் பலவீனமடைவோம்.

பெண்களை பொறுத்தவரையில் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் அதிகம் பாதிப்புறுபவர்கள் அவர்கள். ஆகவே எந்த சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் பலவீனம் அடைவதை முன்னிறுத்த வேண்டாம். தைரியமாக செயற்பட்டு அவரவரின் தனித்துவமான அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

## கேள்வி 10

### நீங்கள் துணிந்தெழு நிகழ்ச்சியை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

துணிந்தெழு பற்றி சொல்ல வேண்டுமென்றால் துணிந்தெழு என்று சொல்லும் போதே எழுந்து வா! என்று அழைப்பதாக தான் தோன்றுகிறது. அதை கூறித்தான் புரிய வேண்டுமென்பதில்லை. ஏனென்றால் இதனுடைய பெயரே எதனையும் தாண்டி வர வேண்டும் என்ற சிந்தனையை நோக்கியதாகவே இருக்கிறது.

இதனை உருவாக்கிய ஜே.எம் பாஸித் அவர்களுக்கு மிக்கவே நன்றிகள். ஏனென்றால் நிறைய நபர்கள் இச் சஞ்சிகையினூடாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதில் நானும் ஒருவராக வருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இது எனக்கு ஒரு பெரிய அடைவு போன்றது. எனக்கு ஏதோ பெரிதாக சாதித்து விட்டேன் என்பதாக உள்ளுக்குள் பட்டாம் பூச்சிகள் பறக்கின்றன. துணிந்தெழுவில் வருகிறேன் எனும் போதே மகிழ்ச்சியாக இருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு நீங்கள் திறமையானவர்களின் வாழ்க்கை பயணம் அதே போல அவர்கள் என்ன செய்து இருக்கிறார்கள்,யார் அவர்கள் என்பதனை காண்பித்திருக்கிறீர்கள்.

அதற்கு துணிந்தெழு குழுவினருக்கு நன்றிகள். மிகவும் சிறப்பாக உங்கள் பணிகளை செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் வளர வேண்டும். நிறைய விடயங்களை நீங்கள் கொண்டு வர வேண்டும். இன்னும் நீங்கள் கட்டுரை போட்டிகளும் நடாத்தி வருகிறீர்கள். அவற்றில் நிறைய நபர்கள் எங்கெங்கோ இருந்து எல்லாம் வருகிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தி பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்துகின்றமைக்கு ஜே.எம் பாஸித் அவர்களுக்கும் துணிந்தெழு குழுவினருக்கும் வாழ்த்துக்கள். வார்த்தைகள் இல்லை மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் மீண்டுமொரு முறை நன்றிகள்.








# ப்ளீஸ்! இந்தப் புத்தகத்தை வாங்காதீங்க! பார்த்தவுடன் வாங்கிவிட்டேன்.

**ஆரா ஃபரீத்**

**புத்தளம்**

கேள்விக்குறிகளும், ஆச்சரியக்குறிகளும் டுவிஸ்ட் மேல் டுவிஸ்ட் வைக்கும் வாழ்க்கை புத்தகத்தில்... "ப்ளீஸ் இந்த புத்தகத்தை வாங்காதீங்க"னு தலைப்பிலேயே ஆர்வத்தை தூண்டும் படைப்பு நம் கோபிநாத் அவர்களுடையது!

பகுத்தறிவைப் பற்றிய பல புத்தகங்கள் உண்டு ஆனாலும் அடுத்த தலைமுறைக்கு சொல்லும் சில அறிவுரைகள்... நடைமுறையில் நடக்கும் சில நிகழ்வுகளைப் பற்றி எடுத்துரைக்கும் வகையில் இப்புத்தகம் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. எழுத்து என்பது வாழ்க்கையின் வெற்றிக்கான ஒரு அறம் சார்ந்த திறவுகோல் என்ற அழுத்தமான நம்பிக்கை உடையவர்களின் நானும் ஒருத்தி. இப்புத்தகம் தன்னம்பிக்கை படைப்புகளின் தர வரிசையில் உடையவர்களில் வைக்கப்பட வேண்டிய ஒன்று.

தொலைக்காட்சித் தொடரில் பார்த்த கோபிநாத் அவர்களுக்கும்,புத்தகம் வழியே பார்க்கும் கோபிநாத் அவர்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. பயணங்களின் போது என் அலைநீளத்தோடு ஒன்றாகிப்போன நண்பனாகத்தான் இந்நூலைப் படிக்க ஆரம்பித்தேன் .இதில் கோபிநாத் அவர்கள் மிக யதார்த்தமாக பேசுவார்.

தெளிவாக தன் முன்னுரையில், "இப்புத்தகத்தில் நான் எதையுமே பெரிதாய் வழங்கிடவில்லை.. ஆனால் நீங்கள் யார் என்பதையும், எங்கிருக்கிறீர்கள் (எந்த நிலையில்) என்பதையும், எதனால் அந்நிலைக்கு ஆளானீர்கள் என்பதையும் தான் இதில் சொல்லியிருக்கிறேன்" என்பார்.. இது இந்நூலுக்கு ஏகப் பொருத்தம் !

"கவலைப்படுவதற்கான காரணிகளைத் தேடித்தேடி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிற நீங்கள்தான், அங்கிருக்கும் சந்தோஷத்திற்கான வெளியை மறைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..." நிதர்சனம்...! ஒவ்வொன்றும் வாயுதிர் இரத்தினங்களாய் மிளிர... முற்கட்பிதங்களை கூட ஹாஷ்யமாக கலாய்த்திருப்பார் கோபிநாத் சந்திரன் அவர்கள். " அளவுக்கு அதிகமாக சிரிக்கவும் கண்ணீர் விட்டு அழவும் நம் சமூகம் "சொல்லாத தடை" ஒன்று வைத்திருக்கிறது...
சிரிப்பதில் – பெண்களுக்கு...
அழுவதில் – ஆண்களுக்கு...

நீங்கள் ஆங்கில படங்களைப் பார்த்தால் அமானுஷ்ய ஹீரோக்கள் கூட அழுவார்கள்.. நம்மூரில் காமெடியன் மட்டும் தான் அழுவார்.." ஆக, யாருக்காகவும் எதையுமே பொருட்படுத்தாம உங்க மனசு போல இருங்கன்னு சொல்கிறார். ஒவ்வொரு அத்தியாயத்திலும் நச்சென்று இருக்கும் வார்த்தைகளை எடுப்பாக்கி ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருப்பார். அது அவரின் கதை சொல்லும் ஆற்றலின் மற்றுமொரு ப்ளஸ் !

" ஒரு வேலையை விரும்பிச் செய்கிற போது உங்களுக்கு அதன் கஷ்டம் தெரிவதில்லை... வருந்தி செய்கிற போது உங்கள் கஷ்டம் பல மடங்காகிறது..." என்பதையும் தெளிவுறச் சொல்கிறார். அடுத்த அத்தியாயத்தில் சுவாரஸ்யமான வாழ்க்கையை எப்படி உருவாக்க

வேண்டும் என வழி சொல்கிறார். "வாழ்க்கையை சுவாரசியமாக வைத்துக்கொள்வது என்பது அப்படி ஒன்றும் கடினமான விஷயம் அல்ல,அது இன்னொரு சுவாரசியமான விஷயம் என்பதோடு மட்டும் எடுத்துக் கொள்வோம்..."

இதனோடு பிரச்சினைகளைக் கண்டு மிரளாமல் அதை பகுதி பகுதியாக தீர்க்கச் சொல்வதோடு அதற்கு உதாரணம் காட்ட இட்லியை கையிலெடுக்கிறார். "முழு இட்லியை முழுங்க நினைத்தால் விக்கல் தான் வரும்... அதை விட்டுவிட்டு பகுதி பகுதியாக சாப்பிடுங்கள். அதுதான் எளிது... அதுபோலவே, பிரச்சினைகளையும் முழுதாய்த் தீர்க்க முயலாமல் பகுதி பகுதியாக தீர்க்க முயலுங்கள்..." என்கிறார்.
சுருக்கமாக,

"இந்த உலகம் உங்களை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதன் முதல் புள்ளி, உங்களிடம் இருந்துதான் தொடங்குகிறது..." என்கிறார்.

"இன்றைக்குப் பெரும் கோடீஸ்வரர்களாய் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களாய், மக்களின் அபிமானம் பெற்றவர்களாய் இருக்கிற எல்லோரும் முதலில் மனதில் கோடிஸ்வரர்களாய் இருந்திருக்கிறார்கள்" எனும் 'Law of attraction' ஐயும் சேர்த்து தந்திருக்கிறார்.

"தொடர்ந்து நீங்கள் அடுத்தவருடன் உங்களை ஒப்பிடுவதால் பலவீனமாகிறீர்கள்... "இவருக்கு இதாம்ப்பா வேலை... யாரையாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பார்" என்று உங்களுக்கு எதிரான கூட்டத்தை நீங்களே உருவாக்கி விடுகிறீர்கள்." என்று இன்றைய Depression WhatsApp ஸ்டேடஸ்கெல்லாம் ஒரு பதிலடி கொடுத்திருப்பார்.

இதற்கு தான் முதல் அத்தியாயத்திலேயே " சந்தோஷம் எதில் தான் இருக்கிறது?
ரொம்ப சுலபம்...
சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற உங்கள் எண்ணத்தில் தான் அது இருக்கிறது..." என்று செம்மையாக சொல்லியிருப்பார்.

ஒரு முறைக்கு பல முறை வாசிக்கும்படி சில இடங்களில் கச்சிதமாக சில கருத்துக்களை பதிவிட்டிருப்பார். உதாரணத்திற்கு, "உங்களின் உண்மையான நண்பர்களையும் உறவுகளையும் உங்களது வீழ்ச்சி அடையாளம் காட்டியிருக்கிறதே... அதற்காக சந்தோஷப்படுங்கள்... காசுக்காக பழகுகிற கூட்டம் பணம் வந்தால் தானாக வரப் போகிறது... இந்த உலகம் அப்படித்தான்... இதற்கெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டே இருக்க முடியாது.நீங்கள் இழந்தது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்...நம்பிக்கையை மட்டும் இழக்கவே இழக்காதீர்கள்."
நான் சொல்வது உண்மை தானே?

இதை விட விஷேடமாக, சின்ன சின்ன தருணங்களில் கிடைக்கிற சந்தோஷங்களின் அருமையை பெருப்பித்து காட்டும் கலையை அற்புதமாக கையாண்டிருப்பார்.

"உங்கள் சின்னச் சின்ன வெற்றிகளைக் கூட "வெல்டன்" சொல்லி வாழ்த்துகிறவர்களை அடிக்கடி சந்தியுங்கள்.

நம்மை பாராட்டவும், தட்டிக்கொடுக்கவும் உண்மைகளைத் தெளிவுபடச் சொல்லவும், எப்போதும் தயாராக இருக்கிறவர்களோடு எப்போதும் தொடர்பில் இருங்கள்... அவர்கள் தான் உங்கள் தன்னம்பிக்கையின் உற்சாக டானிக்." என்கிறார் இலாவகமாக.

ஆசிரியர் 15 பாகங்களைக் கொண்டு நமக்கு வாழ்க்கையை நாம் எப்படி மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதையும், நம் முன்னேற்ற பாதையை எப்படி தீர்மானிப்பது என்பதையும், நமது கொள்கையை அடிமனதில் எவ்வாறு வைக்க வேண்டும் என்றும் எளிய நடையில் கூறுகிறார்.

வாழ்க்கையில் கவலையை மட்டுமே சிந்திக்கும் நாம் நம்முடைய நடைமுறையில் காணப்படும் சின்ன சின்ன விஷயங்களை கண்டு மகிழலாம். வாழ்க்கை என்பது நாம் மகிழ்ச்சியாக வாழவே என்பதைக் கூறுகிறார்.

நாம் தினமும் அலுவலகத்திற்கு செல்லும் பாதையை சிறிது மாற்றி சென்றால் கூட அந்த மாற்றத்தினால் அங்கு காணப்படும் சிறு சிறு நிகழ்வுகளைக் கண்டு மகிழ்ச்சி அடையலாம் ஆசிரியர் கூறுவது சிறு விஷயமே ஆனாலும் அதை நாம் யோசிப்பதில்லை. நாம் நம்முடைய வழக்கமான பாதையை மாற்றி பார்ப்பதே இல்லை. நாம் சிறிது மாற்றி பார்த்தால் நமது வாழ்க்கையில் சுவாரஸ்யம் அனுபவிக்கலாம்.

வார்த்தைகளால் வித்தை செய்யும் எழுத்தாளன் நான் என்று எந்த பந்தாவும் இல்லாமல்... சொல்ல வந்த விடயங்களை தோழனைப்போல், தோழியைப்போல் , ஒரு நலன் விரும்பியாக நம் கையடங்கும் ஒரு நூலாக படைத்திருப்பார் கோபிநாத் அவர்கள்.

இந்த நூல் என் மனதைக் கவர்ந்த, என் எதிர்மறை சிந்தனைகளை தகர்த்தெறிந்த ஒரு அற்புதமான படைப்பாகும்.

# தன் நம்பிக்கை



சுயநலமான உலகினில் எதையும் சாதிப்பது
என்பது சற்று சிரமம்தான் ....

அடுத்தவர்களின் கருத்துக்களுக்கு
இணங்காதே......

நீ உனக்கான தகுதியை அறிந்துவைத்திரு......

" நான் விலைமதிக்க முடியாதவன் " என்ற
வார்த்தையுடன் அடி எடுத்துவை.....

வெற்றியோ... தோல்வியோ...
இரண்டும் அனுபவமே...!!!

எப் . எப் ரிபானா
(மாவனல்லை)



# நீங்களென்பது...

மனக்காயங்கள் வெளித் தெரிவதில்லை.அதனால்தான் மனிதர்கள் தாம் நலமாக இருப்பதாக காட்டிக் கொள்ள முடிகிறது.

வலிகளை ஏற்படுத்தியவர்களே மருந்திடுவார்கள் என நம்பி ஏமார்ந்து போகாதீர்கள். அவர்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சவும் காத்திருக்கலாம்.

அன்பு என்பது இருபக்க கூர்தீட்டிய வாளைப் போன்றது. சிறிதாக பிரச்சனைகள் தலைதூக்கினாலும் அது பாசம் காட்டியவரையும் வெட்டி வீழ்த்திவிடும்

சுயம் என்ற ஒன்றை இழந்த வாழ்க்கை என்பது உயிர் இருந்தும் நடைபிணமாக அலைவதற்கு சமமானது. வாழும் நிமிடங்களை அர்த்தமற்றதாக்கி விடும்

நீங்கள் யாரை வேண்டுமானாலும் நேசியுங்கள். ஆனால் உங்களை மறந்து விடாதீர்கள். இந்த உலகத்தில் நீங்கள் நிலைத்திருக்க உங்களுக்கு முதலில் தேவைப்படும் ஒருவர் நீங்கள் மட்டுமே...

ரெ.சோதிகா(ஆகிஷா)
கொக்குவில், யாழ்ப்பாணம்.



# சமூகம் எப்போது மாறும்

முனீரா புகனி
ஹெம்மாத்தகம

சமூகம் எப்போது மாறும்
ஆம் ஒரு போதும் மாறாது
எதுவரையெனில்
சமூகம் எனும் ஒற்றைச் சொல்லுக்கு
முன்னிலையும் படர்க்கையும்
வரைவிலக்கணமாக இருக்கும் வரை
மாறாது இச்சமூகம்
தன்மைகள் தன்னிலை மறந்து
முன்னிலையை, படர்க்கையைச்

சாடும் வரை
மாறாது இச் சமூகம்
ஏனைய விரல்களின் திசை மறந்து
ஆட்காட்டி விரல்களை மாத்திரம்
நீட்டிக் கொண்டு திரியும் வரை
மாறாது இச்சமூகம்
தன் குறைகள் முழுதும் மறந்து
பிறர் குறைகளை அலசி ஆராய்ந்து

ஆய்வு செய்து வாழும் வரை
மாறாது இச்சமூகம்
தன்கேடு எதுவென ஆன போதும்
அடுத்தவன் கேட்டில்
இன்புற்று வாழும் வரை
மாறாது இச்சமூகம்

அடுத்தவனுக்கு அறிவுரை கூறி
திருந்தென ஏவி
தன்னைத் திருத்திக் கொள்ள
திராணியற்று வாழும் வரை
மாறாது இச்சமூகம்.

"சமூகம்" எனும் சொல்லுக்குள்
"நான்" எனும் உயிர்ப்பொருள்
அடைக்கலமாகும் வரை
மாறாது இச்சமூகம்.
சமூக மாற்றத்தை மூலை முடுக்கில்
தேடித் திரியும் மனிதனே
தேடிப்பார் அது எங்குமில்லை
ஓரிடத்தைத் தவிர.

"சமூகம்" என்பது யாரெனத் தேடிப்பார்
"சமூகமே நீ திருந்தி விடு" எனச் சாடும்
உன் விரல்கள் எத்திசை நீளுமென
அப்போது புரியும்.



# அம்முவாகிய அவன்

ஏழுவண்ணப் பாடலாய்
எனக்குள் எழுதப்பட்டவன்....
எனக்கான எதிர்காலச் சிலுவையை
இலேசாக்கித் தந்தவன்.....

நான் அவனாகி
அவன் நானாகி
அவன் எனக்கு அம்முவாகி ஆறுதலாகி
இந்தக் கவிதையெங்கும் கருவாகி
நிற்கிறான்....

அவன் அவளின் அவன்தான்...
இருந்தும் இவளின் உயிரானான்....
இவளின் உயிராகி
உயிரின் மொழியானான்...

மனக்கசப்புகளை மருந்தாக்கி
தினக்குறிப்புகளைத்தேனாக்கி
தாயாகிச் சேயாகி என்னுயிர்ச் சுவரெங்கும்
சித்திரமாகிச் சிரிக்கின்றான்
எதுவாக இருந்தாலும்
அவன் எனக்கானவன்தான்....

என் கனவுகளின் கருவாகி
கருவுதிரும் கவியாகி
எனக்கான எல்லாமுமாய்
நிறைந்துவிட்டான்....
இனி அவன்
இவளின் அவன்தான்.....

அன்புடன்
அக்கரைக்குயில்

# உயர்ந்த எண்ணங்கள் என்றாலே கேள்விக்குறி தான்...

எண்ணங்களை பொதுவாக நல்லெண்ணம் ,கெட்ட எண்ணம், உயர்ந்த எண்ணம் என குறிப்பிட்டு கூறலாம் .

நம்மில் சிலருக்கு நல்ல எண்ணங்கள் மட்டுமின்றி உயர்ந்த எண்ணங்கள் கூட தோன்றுவதில்லை .

ஏன் இப்பொழுது எண்ணங்களேன்றாலே ?? கேள்விக்குறியாக இருக்கிறது.

இதை நாம் மாற்றவேண்டும்.
இனிவரும் சமூகத்திற்காவது உயர்ந்த எண்ணங்களை பற்றி நாம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

நாம் உயர்ந்த எண்ணங்களை பற்றி சிந்தித்தால் கூட நம்மில் ஓரற்புத மாற்றம் தோன்றும்.

மன்னர்களின் வாழ்கையில் கூட இவ்வுயர் எண்ணங்கள்
பங்களிக்கிறது.

பாரி முல்லைக்கு தேர் கொடுத்தது போல, பேகன் மயிலுக்கு போர்வை தந்தது போல, குமனன் தன் தலையை எடுத்துக்கொள்ளும் படி பெருஞ்சித்தனாருக்கு வாள் கொடுத்து போல, சிபிச் சக்கரவர்த்தி தன் தசையை புறாவிற்கு கொடுத்து போல.

நாமும் இவர்களைப் போல் உயர்ந்த எண்ணங்களுடன் செயலாற்ற வேண்டும்.
மன்னர்கள் என்ற கர்வத்தை கூட விட்டு விட்டு தன் உயர் எண்ணங்களையும், நல்ல எண்ணங்களுடனும் வாழ்ந்த மன்னர்கள் .

நானே இக்கதையை கேட்டு மெய்சிலிர்த்து விட்டேன்.
நீங்களும் இது போல் உயர் எண்ணங்களுடன் செயலாற்ற வேண்டும்.

அப்துல்லாஹ்
கொழும்பு



# முகம் காட்டி செல்லடா என் மகனே!!

மகனே!!
சுகம் தானா?
என் விழி நிறைய
உனைத்
தரித்தேனடா!
இப்போது
கண்ணீராய் கரைந்து
கன்னங்களின்
ஓரமாய்
ஓடி விட்டாய்
உனைக் காணத் துடிக்கிறேன்
முகம் காட்டி செல்லடா
என் மகனே!!

கருவாய் நீ
இருக்கையில்
உன் வருகைக்காய்
காத்திருந்தேன்
பல வலிகளுடன்...
இன்றும்
உன் வருகைக்காய்
காத்திருக்கிறேன்
சொல்லன்னா
வலிகளுடன்....
முகம் காட்டி செல்லடா
என் மகனே!!

மகனே!!
பெற்று உனை
கரம் நிறைய
வாங்குகையில்
என் மொத்த வாழ்வு
நீதானென
மனம் சிலிர்த்தேன்!!
பெற்ற மகன்
உன் வாழ்வில்
தாயே வேண்டாமென
மொத்தமாக
தூக்கி எறிந்தாயே!!
அன்பு மகனே!!

மகளெனக் கொண்டாடிய
உன் தாரம்
ஆனேன் அவளுக்கு
நான் பாரம்
நெஞ்சில் இருந்தால்
சிறு ஈரம்
தள்ளி விடுவாயோ
எனை ஓரம்
ஒதுக்கி விட்டாய்
இந்நேரம்

இதுதானா மகனே!
உன் வீரம்

உன் மகிழ்வே
வாழ்வு என
வாழ்ந்தேனடா!!
நானில்லா
வாழ்வில் தான்
மகிழ்வென்றால்
என் மீதி வாழ்வையும்
இங்கேயே கழிப்பேனடா
மகனே!!
ஒரு முறையேனும்
முகம் காட்டி செல்லடா!!
என் மகனே!

எதனையும் தாங்கிடுவேன்
உன் முகம் காணா
அக் கொடுமையை விட
முகம் காட்டி செல்லடா
என் மகனே!!

ஸஹ்ரா ஸரூக்
திஹாரிய.



# வாழ்க்கையின் பாதி கஷ்டம்

சஜான் சலாம்
சாய்ந்தமருது

இந்த உலகத்தில் மிகவும் அழகிய அமைப்பில் உருவானது அது மனிதனையே சாரும். அது ஒரு குழந்தை பிறப்பதோடு வாழ்க்கை முடிந்துவிடாது அந்த குழந்தை வளர்ந்து ஆளாகி மரணிக்கும் வரையிலும் மனிதனாய் பிறந்து விட்டால் எல்லோரும் கஷ்டத்தை அனுபவித்து தான் பல வெற்றிச் சாதனைகள் புரிந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கு வெற்றி என்பது சாதாரணமாக கிடைத்து விடாது வாழ்வில் எதிர்நோக்கும் முக்கிய பங்களிப்பு கஷ்டத்துக்கு முகங் கொடுத்தவராக இருப்பார்.

அவர் எதிர்நோக்கும் பல இன்னல்கள், சவால்கள் ,அவமானங்களாக கூட இருக்கும் அதனுள் மிக முக்கியமானது இந்த கஷ்டம். மனிதனாய் பிறந்து விட்டால் சிறு குழந்தைக்கும் இருக்கும் பண்புகளில் ஒன்று அது பிறந்து குறிப்பிட்ட நாட்களின் பின்னர் எழுந்து இருப்பது, நடப்பது, ஓடி ஆடி செய்யும் செயல்களில் எல்லாமே அக்குழந்தைக்கு கஷ்டமாக தெரியும் ஆனால் முகங்கொடுக்க பழகியதால் வளர்ந்து ஆளாகி கஷ்டத்தை அனுபவித்து அதற்கு பழக்கப்பட்டு இப்போது வீரநடையாக பயணித்து கொண்டிருப்பர்.

வாழ்வின் பாதியாக கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் என்பன பல வகையாக பிரிக்கலாம் குறிப்பாக சொல்லப் போனால் வாழ்க்கை சாதாரணமாக மிக சுலபமாக முடிந்து விடாது. இந்த பிரபஞ்சத்தில் கஷ்டப்பட்டு முன்னேறியவர்கள் பலர் ஏனென்றால் அவர்கள் பட்ட துன்பத்திற்கு இறைவனால் கொடுக்கப்படும் சிறு பரிசு இந்த வெற்றிப்பாதை உருவாக்குபவனும் அழிப்பதும் அவனது கையில். எத்தனையோ வாழ்க்கை பயணத்தில் ஒவ்வொருவரினதும் கஷ்டத்தினை விதவிதமாக கூறிக் கொண்டே போகலாம். "நான் வாழ்வில் ஏதாவது செய்ய வேண்டும் எனது இலக்கை நோக்கி நகர வேண்டும்" என்று ஒவ்வொரு ஆத்மாவுக்கும் ஆசையுண்டு.

வெற்றிக்கான பாதையின் ஆரம்பக்கட்ட அடித்தளமாக அமைந்திருப்பது வாழ்க்கையில் பட்ட கஷ்டம் தான் அடித்தளம் இல்லாவிட்டால் அத்திவாரங்கள் போட இயலாத காரியம் "முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் ஆனால் முயலாமை ஒரு போதும் வெல்லாது" வெற்றிக்கான பாதையை வழி கொடுக்காது. மனிதனாய் வாழ்ந்து விட்டால் நம்முயற்சிகளை எப்பொழுதும் கைவிடக் கூடாது முயற்சிகளை துவங்கும் போது ஆரம்பத்தில் பிரச்சினைகள், தோல்விகள் என்பன வந்து சேரும் அதனை பொருட்படுத்தாது நாம் முயற்சி செய்வோமேயானால் கஷ்டத்தினை அனுபவித்தவனாக இருந்தால் வெற்றி என்பது வாசப்படி தேடி வரும்.

வாழும் நாட்களில் அவமானங்களை ஓர் படிப்பினையாக எடுத்து ஒவ்வொரு அவமானமும் நாம் செதுக்கும் வெற்றிக்கான படிக்கட்டுகள் என்பதை மனதில் பதித்து நம் பாதையை உருவாக்க வேண்டும். அதன் பிரதிபலனாக சாதனை படைக்க வேண்டும் என்ற வெறிச்செயல் உண்டாகும் அதன் காரணமாக நாம் வைத்த இலக்கு சரியாக நகருமானால் நாம் வாழ்வில் சாதனையாளராக திகழ்வோம்.நாம் வாழும் வாழ்க்கையில் பாதி வாழ்க்கை கஷ்டத்தில் முடியுமானால் மீதி வாழ்க்கை சந்தோச கடலில் பூப் பூக்கும் வெற்றியின் பாதையினை உருவெடுத்து தரும்...



# தாமாக சிந்திக்காதவரை

**அஸ்றம் காஸிம்**
இறக்காமம்.

நாம் அன்றாடம் நுகர்வுசெய்யும் சின்னச் சின்ன அத்தியவசியப் பொருட்களில்கூட கூடிய தரமும், சிறப்புத் தன்மையும் பற்றி அதிக கவனம் கொள்கிறோம். ஏன் எமக்கு ஏற்படும் லேசான தலைவலிக்குக் கூட சிறந்த வைத்தியர் யார் உள்ளனர் என்பதை விசாரித்து வைத்தியம் பெற அணுகிறோம். ஆனால், காலமெல்லாம் எம்மை ஆளப்போகும் அரசியல் பிரதிநிதி குறித்தும், தலைமைத்துவம் குறித்தும் எமக்குள்ள பொதுவான சமூக அசிரத்தை ஆரோக்கியமற்ற பதிவையே அளிக்கிறது.

"நாம் அரசியலைத் தவிர்ப்போமானால் எம்மால் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் எம்மை ஆள நேரிடும்" எனும் கிரேக்க தத்துவவாதியொருவரின் கருத்திற்கமைவாக அரசியல் சமகாலத்தில் தவிர்க்கவும், ஒதுக்கவும் முடியாப்பொருளாகி விடுவதை நாம் அவசியம் உணர வேண்டும். பல கட்சி அரசியல் (Multy party politics), தேர்தல் (elections), வாக்குரிமை (voting right), பிரதிநிதித்துவம் (Representation), பிரதிநிதி (Representative) என்பன ஜனநாயகம் உணர்த்திய பண்புகள் என்பதை நாமனைவரும் மறந்துவிட முடியாது. எம்மை ஆளுவோரின் எதேச்சதிகாரப்போக்கை கட்டுப்படுத்த அரசு (State) எமக்களித்திருக்கும் மூக்கணாங் கயிறே இவை.

வெறுமனே காலா காலத்திற்கு வாசலுக்கு வந்து பணத்திற்கும், பொருளுக்கும் எமது வாக்கை கட்டுண வைக்கும் பாரம்பரியவழிக் கலாசாரத்திற்கு (Traditional culture) இனியாவது முற்றுப்புள்ளியிட வேண்டிய தார்மீகம் எம்மனைவருக்குமுள்ளது. கட்சி, கொள்கை தன் சுய தேவைப்பூர்த்தி என்பவற்றுக்கப்பால், தான் சார்ந்த சமூகத்தின் பொதுவான தேவைகள், நலன்கள், பொதுஜன அபிப்பிராயம் (Public Opinions) ஆகியவற்றை பிரதானப்படுத்தி, அதன் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எம்மிடமுள்ள ஒவ்வொரு வாக்குகளையும் பாவிப்போம்.

பழைய பல்லவி போல மரபுவழிப் பாரம்பரியம் கொண்ட முதுநிலை அரசியல் பிரதிநிதிகளுக்கு முடிவு கட்டி, இற்றைப்படுத்தப்பட்ட (Updating) புதிய சந்ததியின அரசியல் தலைமைத்துவங்களை இனியாவது உருவாக்குவோம், ஊக்குவிப்போம். கட்டுண்ட அரசியல் எதிர்ப்பு அரசியல், அடிபணிந்த அரசியல் மூலம் நாம் இறந்த காலத்தில் பெற்றவைகள்தான் என்ன? என்பது பற்றிய பொதுவாக பார்வையை யதார்த்தப்புலன் கொண்டு நோக்கி, சார்பு அரசியல் மூலம் எமது சமூகத்திற்குத் தேவையானவற்றைப் பெற வாக்குகளை யோசித்தே பிரயோகிப்போம்.

ஒவ்வொரு ஊருக்கும் சுதேச தலைமை,பிரதிநிதி குறித்த இலக்குகளை (Goal) அகலத்திறந்து விடுவோம். ஆரோக்கியமான நீடித்த திட்டங்களை (sustainable Project) கொண்டுவர அரசியல் தலைமைகளை வேண்டுவோம். விமர்சனத்தையும் ஆக்கபூர்வமாக முன்நிறுத்தி ஒற்றுமையுடன் ஆளப்பட, ஆள்வோரை வேண்டுவோம். அதற்காகவேனும் தாமாக சிந்தித்து எமக்குள்ள "வாக்குகளை" பாவிப்போம்.

தொடரும்....




# கவிதைப் போட்டியில் (2021) முதலாம் இடத்தைப் பெற்ற கவிஞர் அப்துல் றகுமான்

முஸ்லிம் சமய கலை கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை தேசிய மீலாத் தின (அறுசீர் விருத்த) மரபுக்கவிதைப் போட்டியில் (2021) முதலாம் இடத்தைப் பெற்ற அப்துல் றகுமான் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் கலை மணம் கமழும் ஏறூர் மண்ணில் முற்போக்கு இலக்கிய வாதியாகவும் புரட்சிகரமானதோர் கவிஞராகவும் திகழும் ஏறூர்க்கவிக்கோ அப்துல் றகுமான் அவர்கள் 1970களுக்கு முற்பட்ட காலத்திலிருந்து புதுக்கடை றகுமான் என்னும் புனைப்பெயரிலே இலக்கியத்திற்குள் பிரவேசித்தார்.

இவர் கிழக்கு மாகாண ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகைக்கான ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# காலத்தின் கோலம்

காலம் செய்யும்
கோலத்தின் மத்தியில்
எத்தனை மாற்றங்கள்
எத்தனை
எதிர் பார்ப்புக்கள்
ஏமாற்றங்கள்

கடந்து வந்த பாதையை
திரும்பி நின்று கண்களை
ஓட்டுகின்றேன்
உண்மை உறவின்
உரிமைகள் பல உருக்குலைந்து
போய்
விட்டன நட்பின் நாணயமும்
போலிகளால்
கேலியாக்கப்படுகின்றன.

உறவுகள் என்பதெல்லாம்
உண்மையே என்றல்ல
பணத்துக்குள் சுழலும்
போலிப்பாசங்கள்தாம்.

உண்மையின் உறக்கத்தை
காலமும் நன்மையாகவே
கருதுகின்றது.
நீதியின் இருப்பிடங்கள்
வீதியில் வீழ்ந்து மடிகின்றன
நேர்மைகளின் சோர்வுகள்
கலியுகத்தை அலங்கரித்துக்
கொண்டிருக்கின்றன.

நிழலைத்தேடி
அலையும் இதயங்களுக்கு
அனலின் வரவேற்பு
எங்கும் காத்துக் கிடக்கிறது.
அவனியில் "வழிகாட்டி" என்று
எல்லாம் அழிவின்
வழிகேட்டில் தானோ?

லரீபா பதுர்தீன்
கலேவெல



# ஒரு வார்த்தை!

உளவியலாளர் ஊடகவியலாளர்
Rj Fazira Junaideen

இன்றைய இறுக்கமான ஒரு சூழ்நிலையில்,எம் வாழ்க்கையில் எம்மோடு பயணிக்கக்கூடிய மனிதர்களுள் உறவுகள், நட்புக்கள், என்று ஒவ்வொருவருக்குள்ளும் வெவ்வேறு பிரச்சினைகள், கவலைகள் ,வெளியே சொல்ல முடியாத காயங்கள், இருக்கத்தான் செய்யும்.


இப்படியான காலகட்டங்களில் அவர்கள் கவலையோடும்,விரக்தி உணர்வோடு இருப்பதை நீங்கள் அவதானித்தால் நிச்சயம் அவர்களுக்கு தோளோடு தோளாக இருங்கள்.

பெரிதாக நீங்கள் ஒன்றும் செய்துவிட தேவையில்லை அவர்களுக்கான "ஒரு வார்த்தை" அவர்கள் கவலைகளை துடைத்தெறிய கூடிய ஆறுதல் வார்த்தைகளை அள்ளித் தூவுங்கள். அவர்களை அந்த தருணத்திலிருந்து வெளியே கொண்டு வாருங்கள் உற்சாகமான வார்த்தைகளை கூறி தட்டிக் கொடுங்கள், அவர்கள் வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலும் துவண்டுவிடாமல் தூக்கி விடுங்கள்.

இன்று எத்தனையோ பேர் மன அழுத்தம் காரணமாக யாரும் ஆறுதல் வார்த்தை கூற கூட யாரும் இல்லாமல் மனது உடைந்து போய் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை நாம் அன்றாடம் செவியுருகின்றோம்

ஆம் அன்பு உறவுகளே!
"உங்களது ஒரு வார்த்தை" அவர்களை விபரீதமான விளைவில் இருந்து பாதுகாத்து சந்தோஷமான ஒரு வாழ்க்கையை வாழ நிச்சயம் உதவும்.

உங்களுக்கு நேரமில்லை..
என்று கூறி அலட்சியமாக இருந்துவிடாமல், ஒருவரை விரக்தியின் விளிம்புக்கு சென்றுவிடாமல் அவர்களை நாம் பாதுகாத்து அல்லாஹ்வின் ஈடேற்றத்தை கொள்வோமா!



# உழைப்பே உயர்வு

ஏறூர்க்கவி
எச்.எம்.எம்.றசீம்

வாழும் வழியறியாது
வயிற்றுப் பசிக்காக நாளும்
கை நீட்டி இரந்திடும்
காலம் இனி வேண்டாம்

மற்றவரெமைக் கண்டு
மனதினால் தூற்றி
இழிவோடு ரூபாய்
இரண்டை ஈர்ந்தது போதும்

திசையெங்கும் நாம்
தினந்தோறும் – மற்றவர்
கடை படியேறிக்
கை விரித்தது காணும்

களவு பொய் சொல்லிக்
கலப்படம் மோசடி புரிந்து
கணக்கற்ற சொத்துச் சேர்வுக்கு
கணக்கிடும் காலம் வரும்

அரச பணியில் – தினம்
அரட்டையடித்து விட்டு
அரசையே ஏமாற்றிப் பெறும்
அரச வேதனமும் வேண்டாம்

சுறுசுறுப்புதனைக் கலைந்து
சோம்பேறியாய்த் திரிந்து
மற்றவர் உழைப்பில்
மனதார உண்பதுவும்,

பேதைகள் போல்
போதைக்கிரையாகி – விற்றுப்
பணம் சம்பாதித்துப்
பண்பிழப்பதுவும் ஏராளம்

கரம் பிடித்த மனையாளின்
கற்பினை விற்றுக்
காலம் கடத்தி
கழிவாய்ப் பெயர் வாங்கிடுவதும்,

கொலை கொள்ளையெனக்
கொடுஞ் செயல்களால்
கோடிப் பணமுழைத்துக்
கொள்கை மறப்பதுவும் அதிகம்

இத்தரையென்றும் சிறந்திடவே
இனியாவது நாம்
அகத்தினிலேற்று இழிவுகள்
அத்தனையும் ஒழிப்போம்

குவலயமே போற்றிக்
குறைவில்லாது உயர்ந்திடவே
உடலசைத்துத் தினம்
உழைப்பினில் வாழ்ந்திடுவோம்





# தோல்வியின் அடிச்சுவடுகள்

Fowzuna Izzadeen
Psychologist & Co - founder
Cure and Care

அது 1996 ல் ஒரு நாள். ஜப்பானின் NHK தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையின் எங்கோ ஒரு மூலையில் வாழும் விலாசம் தொலைந்த ஒரு குடும்பத்தினரை தேடி வருகின்றனர். இறந்து போன ஒரு நபரிற்கு மரியாதை செய்வதற்காகவே குடும்பத்தினரை தேடி வந்திருந்தார்கள். அவர்கள் ஜப்பானிய பாடசாலைகளில் கற்பிக்கப்படும் 5 ம் தர பாட நூலொன்றையும் கொடுத்து விட்டு செல்கின்றனர்.

அந்த பாடநூலில் 12 பக்கங்கள் அவர்களது தந்தை பற்றிய குறிப்புகள் நிரம்பியிருந்தன. "ஒரு தோல்வியின் கதை "அங்கே மாணவருக்கு படிப்பினையாக போதிக்கப் படுகின்றது. ஆம் அது "The Great Loser " பற்றிய பாடம்.

இலங்கையில் 96 இன் பின்னர் தான் Karunananda Ranatunga பற்றி சில தகவல்கள் வெளிச்சத்திற்கு வரத்தொடங்கின. ஆனால் அதற்கு முன் கடந்து போன 32 வருடங்கள் கருணானந்த ஜப்பானிய மாணவர்களுக்கு ஹீரோ.

அது 1964ஆம் வருடம். கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள். 10000 அடி ஓட்டப் போட்டிக்காக இலங்கையில் இருந்து தெரிவாகி போய் தோற்றதனால் வரலாற்றில் இடம் பிடித்த அந்த வீரனின் கதை தான் இது.

அந்த வருடம் குறித்த போட்டியில் முதலாம் இடம் பிடித்தவரை வரலாறு மறந்து விட்டது. 20 வது சுற்றில் தனியாக ஓடியவரைப் பார்த்து பார்வையாளர்கள் சிரித்தார்கள், செருப்புகளையும், போத்தல்களையும் எறிந்தார்கள். 24 வது சுற்றில் ஒரு சிறுவன் மட்டும் கைத்தட்டி ஊக்கப்படுத்தினான். பின் உலகம் எழுந்து நின்று கை தட்டியது..

"உங்கள் நாட்டவர் எல்லாம் தலைகீழாகவா ஓடுவார்கள்?" என சக வீரர்கள் கேலி பேசினார்கள். "வெற்றி பெறுவதும் தோற்பதும் இரண்டாம் பட்சம். நான் ஊரில் இருந்து வந்தது ஓடுவதற்காக. மற்றவன் ஓடி முடித்து விட்டான் என்பதனால் என் இலக்கு பூரணமாகவில்லை. என் சிறிய மகள் என்றோ ஒரு நாள் என் தந்தை ஒரு தலை சிறந்த

வீரன் என்று நிச்சயம் கூறுவாள் "என்று பதில் சொன்னவர் கருணானந்த. மகள் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் ஜப்பானிய மாணவர்கள் சொன்னார்கள், முன்மாதிரி கதாநாயகன் என வழிநடந்தார்கள்.

Olimpic போட்டிகள் முடிந்த பின் அனைவரும் தத்தமது நாடுகளிற்கு திரும்பினர். கருணானந்த ஜப்பானின் மூலை முடுக்கெல்லாம் இருந்த பாடசாலைகளிற்கு சிறப்பு விருந்தினர் ஆனார், வாழ்வு பற்றி போதிக்கும் ஞானியாக கொண்டாடப்பட்டார். இரண்டாம் உலகப்போரில் உருக்குலைந்த ஜப்பானிற்கு கருணானந்த ஏதோ செய்தி சொன்னார். துணிவுடன் எழுந்து நிற்க வழி காட்டினார்.

அன்று கருணானந்த olimpic கிராமத்தில் தங்கியிருந்த அறை origami எனப்படும் ஜப்பானிய கைப்பணிப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு ஒரு நூதனசாலையாக பராமரிக்கப்படுகிறது.

போட்டியின் பின் ஜப்பானிய மக்கள் பெருந்திரளாக அவரை மரியாதை சகிதம் வழியனுப்ப தாய் மண்ணோ ஏனோ தானோவென்று உள்வாங்கியது. 1975 ல் கருணானந்தவின் குடும்பத்திற்கே ஜப்பான் புலமைப்பரிசில் கொடுத்து வரவேற்க காத்திருந்தது. ஆனால் பிறந்த மண்ணோ, 1974 இறுதியின் பின் அவரின் குடும்பத்தை தெருவில் விட்டு ஒவ்வொருவரையும் நாலா புறமும் சிதற விட்டு தொலைத்தே விட்டது.

மீனிற்கு இரையான கருணானந்த மீட்கப்படவில்லை. மீண்டும் பேசப்படவுமில்லை. ஆனால் 2018 இலும் கூட 3ஆம் தர ஜப்பானிய பாடநூலிலும் கருணானந்த உயிர்தெழுந்தார். அன்று 60000 ற்கும் மேற்பட்ட பார்வையாளர்களின் வாய்களை "come on ceylon, come on ceylon " என்று உச்சரிக்க வைத்த அந்த Great Loser இன் பெயர் இலங்கை வரலாற்றில் அண்மைய காலம் வரை பேசப்படவில்லை.

இப்படித்தான் பல நேரங்களில் சில விடயங்களின் அருமை, பெருமை சில மேடைகளில் பேசப்படுவதில்லை. என் அருமை தெரியவில்லையே என விரக்திக்கு உள்ளாகிறோம். என் சேவைக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என தூக்கம் தொலைக்கிறோம். எந்த தகுதியும் இல்லாதவர்கள் கொண்டாடப் படுகிறார்கள், நாம் புறக்கணிக்கப்படுகிறோமே என அங்கலாய்க்கிறோம்.

கருணானந்த இலங்கையில் பிறந்திருந்தாலும் அவரை உதாரணமாக்கி உயர்வதற்கு ஜப்பானியரால் மட்டுமே முடியும் என்பதே உண்மை. சில பொழுது அல்ல, பெரும்பாலும் இந்த உலகம் தகுதியானவர்களை இனங்காண்பதில் தவறிழைத்து விடுகிறது. விலை உயர்ந்த வைரங்களின் பெறுமதி அறிந்தவரை தேடி ஹிஜ்ரத்களும் அவசியமாகிறது.

விளங்கும் ஆனா சுணங்கும். ஏனெனில் நம்ம டிசைன் அப்படி.

# இரு ஜீவன்கள்

தியாகம் என்ற சொல்லைக் காணும் போது இரு ஜீவன்களின் முகங்களே கண் முன்னே தோன்றுகின்றன. இவ் உலகை காண்பித்த உயிர்கள். எமக்காய் அவர்களின் வாழ்நாட்களை அர்ப்பணித்த தியாகிகள். மழைக்கும் வெயிலுக்கும் என்றில்லாமல் பல பாதுகாப்புக்களைத் தருகின்ற கூரைகள் போல எல்லா துன்பங்களையும் தாங்கவே தாங்கிக்கொண்டு இன்பங்களை மட்டுமே எம் பக்கம் வீசச் செய்திடுகின்ற உயர்ந்த உள்ளங்கள் கொண்டவர்கள் அவர்கள்.

பிள்ளைகளின் புன்னகை முகங்களைக் காண்பதற்காய் தன் இன்னல்களைக் கூட இன்பமாய் கடந்திடும் உறுதியான மனங்களைக் கொண்ட ஜீவன்கள். பல தியாகங்கள் செய்த போதும் நமக்காய் பட்ட கஷ்டங்களை என்றுமே சொல்லிக் காட்டாதவர்கள். என்றுமே எப்போதுமே எமக்கான தூண்களாய் பக்க பலமாய் நிற்கக் கூடியவர்கள்.

தன் வாழ்க்கை முழுக்க தியாகங்கள் செய்த பெற்றோர்களை அவர்களின் இறுதி மூச்சுவரை நம்முடனே வைத்திருந்துப்பது தான் நாம் செய்யும் கைமாறு.

**அறூபா அஹ்லா**
**கல்முனை**



# ஆணவம்

**கவியருவி றிபான்**
**அக்கரைப்பற்று.**

எனக்கு எல்லாம் தெரியும் என்றால்...
உன்னால் எதையும்
தெரிந்து கொள்ள முடியாது...
எல்லோருக்கும் எல்லாம் தெரிந்தால்...
எவரிடமும் எந்தந் தேவையும் இருக்காது....

உனக்கு கீழ் உள்ளவரிடம் கூட
உனக்குத் தெரியாதது தெரிந்து இருக்கலாம்....
அவரிடம் நீ நினைத்தால்
கற்றும் கொள்ளலாம்...
பாகுபாடு இல்லாமல் எதையும் எவரிடமும்
கற்றுக் கொள்ள உனக்கு
ஆர்வம் இருந்தால் மட்டுமே முடியும்...
எல்லாம் தெரியும் என்ற
ஆணவத்தோடு இருந்தால்
எதுவும் தெரியாமல் அசிங்கப் படுவாய்....

தெரியாததை தெரியாது சொல்லி...
தெரிந்தவரிடமிருந்து அறிந்து கொள்...
அறிந்து கொள்ள அடுத்தவரை
ஆராயத் தேவையில்லை....

பிறக்கும் போது தெரிந்து கொண்டு
இங்கு யாரும் பிறப்பதில்லை...
இறக்கும் போதும் எதுவும் தெரியாமல்
இறப்பதும் பொருத்தம் இல்லை....

நீயும் தெரிந்து
அடுத்தவருக்கு கற்றுக் கொடு...
மரணத்தை தாண்டி நீ கற்றதை
மற்றவருக்கு விட்டுக் கொடு....

எல்லாம் தெரியும் என்ற
ஆணவம் இனியும் வேண்டாம்
அப்படி சொன்னால்
அவருக்கு எதுவும் தெரியாது
என்று பொருள்.....



# சினோபோம்மும் இளைஞர்களின் மூட நம்பிக்கையும் Sinopharm

M.Aathik
Student pharmacist H&D Nursing school

எனக்கு தற்போது வயது 21 நான் 1 மாதத்திற்கு முன் தடுப்பூசி ஏற்றிக் கொண்டேன். எனக்கு எந்த பிரச்சினையும் இதுவரை நான் உணர வில்லை.

30– 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி நாடளாவீய ரீதியில் வழங்கப்பட்டது. நிறைய வயதானவர்கள் நடக்க முடியாதவர்களும் கூட நீண்ட வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்து அந்த தடுப்பூசியினை பெற்றுக்கொண்டனர். முதல் நாள் 30–60 வயதுக்குட்பட்டவர்களுள் 1500 மேல் தடுப்பூசி ஏற்ற வருகை தந்தனர். ஆனால் முதல் நாள் 20–30 வயதிற்களுக்குட்பட்டவர்கள் 50 பேர் மாத்திரம்தான் வருகை தந்தனர் ஒலுவில் தடுப்பூசி மையத்திற்க்கு.

ஏன் 20–30 வயதினர் மத்தியில் இப்படியொரு மூட நம்பிக்கை ஏற்படுகின்றது. சிந்திக்கும் ஆற்றல் உள்ள இளைஞர்களே பல வதந்திகளுடன் இருக்கின்றார்கள் என்று புரிவதும் இல்லை. வட்சப்புக்கு அநளளயபந அனுப்புகின்றார்கள். என்ன ஊசி போடுறாங்க என்று Sinopharm என்றால் வேற ஊசி போடமாட்டாங்களா என்று கேட்கின்றார்கள் இல்லை என்று பதில் கூறினால் ஏன் Sinopharm போடமாட்டங்களா என்றால் நாங்க வாழுறது பிடிக்கலயா? என்று சொல்லுராங்க.

எனக்கும் ளுைழிாயசஅ பற்றி ஆரம்பத்தில் ஆயிரம் சந்தேகங்கள் இருந்தன. அனைத்தையும் துறைசார் நிபுணர்களிடமும், பிரபல வைத்தியர்களிடமும் கலந்துரையாடல் மேற் கொண்டு சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொண்டேன். பின்பு அறிந்து கொண்டேன்.

Sinopharm தடுப்பூசி சிறந்தது என்று

உங்களுக்கு ஏற்படும் தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் எல்லாம் பல ஆய்வுகளுக்கு பின்புதான் பாவனைக்காக வருகின்றது அதனை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

Sinopharm தடுப்பூசி மற்றைய தடுப்பூசிகளை போல் பாதுகாப்பானது, உபயோகமானது. தேவையானதும். சீனாவின் தயாரிப்பு என்ற ஒரேயொரு காரணத்துக்காக சினோபோர்ம் தடுப்பூசியைப் பற்றி வீண் சந்தேகங்கள் கொள்ளாதீர்கள் பயப்படாதீர்கள்

மற்றைய தடுப்பூசிகளுடன் ஒப்பிடுகையில் இந்த Sinopharm தடுப்பூசி ஏற்றிய பின் வரும் காய்ச்சல், வலி, உடல் வலி பக்க விளைவுகள் இல் குறைவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

பைசர் தான் வேனும் அஸ்ராசெனிக்காதான் வேண்டும் என்று தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளாமல் இருந்து விடாதீர்கள் எல்லாம் சிறந்த ஊசிதான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வது சிறந்ததாகும்



# திறமை

Ihsana Imthiyas
College of Education

திறமை என்றால் என்ன? மனிதர்கள் அனைவரும் ஒரேமாதிரியான திறமைகளை கொண்டிருப்பதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் மனிதன் என்ற ரீதியில் ஏதோவொரு திறமையை கொண்டிருக்கிறான். சில திறமைகள் பிறப்பின் வழி வந்தவை சில திறமைகள் காலச் சூழலால் நாமே வளர்த்துக் கொண்டவை.

நாம் அன்றாடம் கடந்து போகும் நம் வாழ்க்கையில் பல்வேறு திறமைசாலிகளை காண்கிறோம். நீங்களே அவதானித்து இருக்கலாம், பலர் சில நொடிப்பொழுதுகளில் உயர்ந்து விடுவார்கள். பிறகு ஆளையே காண முடிவதில்லை. புதிதாக எதையும் செய்வதும் இல்லை.

“எதுக்குமே துப்பற்றவர்கள்” என்று சொல்லப்படுபவர்கள் கூட இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடமும் ஏதோவொரு திறமை அவர்களுக்கு தெரியாமலே ஒளிந்து கொண்டு தான் இருக்கிறது.

திறமை என்பது ஒரு ஒளி. வாழ்க்கை ஒளிர்வாக இருக்கும் போது நாம் அதை கண்டுக் கொள்ளவதில்லை. எம் வாழ்க்கை எப்போது இருளடைகிறதோ அப்போது தான் அந்த ஒளி வெளித் தெரிகிறது.
உன்னை நம்பு, என்னால் முடியாதது எதுவும் இல்லை என்று நீயே உன்னை நம்பு. உனக்குள் உள்ள திறமைகளை நீயே அறிந்து கொள்வாய். உண்மையில் யாராலும் வளர்த்துக் கொள்ள முடியாத திறமை என்று எதுவுமே இல்லை. திறமை இல்லாதவர்கள் என்று யாருமே இல்லை.

ஒரு தாளும் ஒரு பேனாவும் தான் ஒருவரது திறமையை கணிப்பிடும் என்றால் தோமஸை நாங்கள் அறிந்திருக்க முடியாது. நாங்கள் அனைவரும் மின் குமிழை பயன் படுத்தி இருக்க முடியாது.

நேற்றைய நாள் எங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்பது முக்கியமல்ல இன்று எப்படி என்பதை பாருங்கள். ஒரு பரீட்சை பெறுபேற்றை வைத்து உங்கள் மொத்த திறமைகளையும் கணக்கிட்டு விடாதீர்கள். எங்களுக்குள் உள்ள திறமைகளை நாமே தேட ஆரம்பித்தால். அதன் அளவு உலகையே மிஞ்சி விடும்.

தெரு விளக்கில் படித்த லிங்கம் ஜனாதிபதி ஆனார். படிக்க வசதியே இல்லாத கலாம் அறிவியல் விஞ்ஞானி ஆனார். பத்தாவது கூட

படிக்காதவர் உலகிலே மிகப் பெரிய பணக்காரர் ஆனார். இவை எல்லாம் கேட்டுக் கேட்டு புளித்திருக்கும். கேட்பது மட்டும் முக்கியமல்ல கொஞ்ச நேரம் எடுத்து சிந்தித்து பார்க்க வேண்டும்.

திறமைகள் அனைவரிடமும் நிறைந்துள்ளன. அதை செயல்படுத்தும் விதங்களில் தான் உங்களுக்கான இடங்களை நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள்.

சிற்பிக்குள் முத்து அடைப்பட்டு பாறைக்குள் சிறைப்பட்டு இருப்பதால் யாரும் அதனை கண்டுக் கொள்ளவதில்லை. முத்து எப்போது வெளிப்படுகிறதோ அப்போது தான் உலகம் அதன் மதிப்பை அறிகிறது. உனக்குள் உள்ள திறமைகளும் அவ்வாறே வெளிப்பட்டால் மாத்திரமே உலகம் உன் மதிப்பை அறிந்து கொள்ளும்.

தோல்விகளை துணிச்சலாக எதிர்க் கொள்ளப் பழகினால் தான் வெற்றிகளை முழுமையாக அனுபவிக்க முடியும். அது உங்களை அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி உயர்த்திக் கொண்டே இருக்கும்.

உங்கள் திறமைகளை நீங்களே இனங்காணுங்கள். வாய்ப்புகள் எல்லோருக்கும் தானாக அமைவதில்லை. நாங்கள் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அடுத்த கட்ட வாழ்க்கையை நோக்கிய பயணத்திற்கு உங்களை நீங்களே தயார் படுத்திக் கொள்ளுங்கள்.

எல்லோரும் திறமையானவர்கள் தான் வெவ்வேறு துறைகளில். உங்களுக்கான துறை என்ன என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். வெற்றியை இலகுவாக சுவீகரிக்க முடியாது பொறுமையாக முயற்சி செய்யுங்கள்.

இது முயற்சி செய்பவர்களுக்கு மட்டுமே சமர்ப்பணம்.



# என் உடன்பிறவா அண்ணனுக்காய்

தொப்புள் கொடி உறவை விடவும் –
பாரினில் உன் உறவு உயர்கிறது..
தானாக அமைந்த உறவை மீறியும் –
தரணியில் நானாக அமைத்த உறவு
மிளிர்கிறது..

காதல், காமம் என்னும் உணர்வுகளை உதறி
– என்னிடம் கருணையும், கரிசனையும்
காட்டினாய்..
சோகம், தடுமாற்றம் என்னும் இருட்டில்
இருந்து –என்னை சந்தோஷத்தையும்,
தைரியத்தையும் வரவழைத்தாய்..

நானிருக்கேன் துன்பத்தை தூர விரட்டு
என்றாய் – இன்றோ துன்பம் சூரியனை
கண்ட பனிபோல் ஆனது..
என் இராஜ்ஜியத்திற்கு நீதான் இளவரசி
என்றாய் – இன்றோ இளவரசியாய்
ஈறுலகத்திலும் நானுணர்ந்தேன்..

ஒரே வயிற்றில் உதிர்த்ததும் இல்லை..
ஒரே மடியில் வளர்ந்ததும் இல்லை..
தூளியில் ஒன்றாக ஆடியதும் இல்லை..
துரத்தி விளையாடி ஓய்ந்ததும் இல்லை..

விலைமதிப்பற்ற சொத்து நீ எனக்கு –
உயிருள்ள வரை உன் உறவு வேண்டும்
எனக்கு...
உடன்பிறவா அண்ணன் நீ எனக்கு – உடன்
பிறப்பை விட மேல் எனக்கு..

நுஸ்ஹா அஸீம்
ஓட்டமாவடி



# கவித்துவம்

கவிப்பொய்கை
ஜவ்ஸன் அஹமட்

ஒவ்வொருவருடைய உணர்வுகளும் வித்தியாசமானது ஒருவருடைய உணர்வை போன்று மற்றவருடைய உணர்வு அமைந்து இருப்பதில்லை. அது உற்ற நண்பர்களாக அல்லது கணவன் மனைவியாகவும் இருந்த போதிலும் சரியே,

உள்ளத்து உணர்வுகளை வர்ணனை கொண்டு வண்ணம் தீட்டுவதற்கு கவிதை என்று சொல்லப்படும் அந்த கவிதைகள் இன்றும் என்றும் காலத்தால் அழியாத பொக்கிஷங்களே.

அந்த பொக்கிஷங்களை யாராலும் எப்போதும் என்றும் திருட முடியாது அப்படி திருடுவது மிகப்பெரும் குற்றமாகவும் மோசடியாக கருதப்படுகிறது.

உள்ளத்திலிருந்து வெளிப்படுகின்ற வெளிப்பாடுகள் வித்தியாசமாக அமைந்திருப்பதை மனநிலையும் அந்த சூழலுமே நிர்ணயிக்கிறது.

சூழலுக்கு ஏற்றவாறு எழுதப்படுகின்ற கவிதை உணர்வுகளை வெளிப்படுத்துகிறது நிலைமைக்கு ஏற்றவாறு அந்தக் கவிதைக்கு உயிரோட்டம் அமைகிறது.

பிறருடைய உள்ளத்து உணர்வுகளை பழிப்பதற்கும் வசை பாடுவதற்கும் எவராலும் முடியாது காரணம் ஏன் என்று சொன்னால் ஒவ்வொருவருடைய உள்ளத்து உணர்வுகளும் போற்றப்பட வேண்டியவர்கள் இன்னும் மதிப்பளிக்கப்பட வேண்டியவைகள்.

ஏராளமான புத்தகங்களை இன்று நாம் காண்கிறோம் எத்தனையோ எழுத்தாளர்கள் தினம் தினம் பல கவிதைகளையும் கட்டுரைகளையும் விமர்சனங்களையும் எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். அத்தனையும் என்றும் ஏதோ ஒரு விதத்தில் பாதுகாக்கப்பட வேண்டியவை.

அதிகமான புத்தகங்களை வாசிக்க வேண்டும் இதன் மூலமாக எங்களுடைய மனநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். அத்தோடு சுய கருத்துகளில் ஆளுமை ஏற்படும்.

# தண்ணீரில் கண்ணீர் மீன்கள்

கரைசேரா ஓடம் கப்ரில் சேர்த்ததோ!!
கரைத் தெரியும் நிமிடத்தில்
இமை திறந்து மூடும்
நொடிப் பொழுதில்
பாதை புரள்வதை சற்று
உணரும் போதே
ஒருவரை ஒருவர் காப்பாற்ற எத்தனித்தாலும்

விதிக்கப்பட்ட அந்நேரம்
அல்லாஹ்வின் அழைப்பு
ஒரு கணமேனும் தாமதிக்கவில்லை
அழைத்துக் கொண்டதே
தண்ணீருக்குள் தத்தளித்ததே ஷஹீதுடைய
ஜனாஸாக்கள்

பள்ளி நினைவுகளோ இருவருடம்
கனவாகிப் போன கதை
ஒரு நாளில் சொல்லி முடியாமல் மீதம் இருக்கவே
ஆசையோடு பள்ளிக்கூடம் அழைத்ததோ
இல்லை இல்லை விதிக்கப்பட்ட
மரணமே அழைத்தது மகளே!!
இரண்டாம் நாள் ஆசையோடு
சுமந்து சென்ற அத்தனையும்
தண்ணீரில் கண்ணீராய் கரைந்து
கருப்பு தினமாய் படிந்து போன நாளாச்சே
இறைவா!!!

காலையில் அவசரமாய் தந்த முத்தம்
ஈரம் இன்னும் காயலயே கண்மணியே!!
அதுவே நிரந்தர கண்ணீர் ஆகுமென்று அப்போது
அறியலையே!!
பகலில் உன்னை பார்த்திருக்க
காத்திருக்க வைக்காமல்
இடியாய் வந்து விழுந்த செய்தி
பாச மகளே உன்னைப் போன்ற பலரின் மரணச்
செய்தி
இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி
ராஜிஊன்!!

இறைவா!!
அவ்வேளையில் மலக்குல் மௌவ்தால்
கைப்பற்றிய உயிர்கள்
என்ன வேண்டியதோ!!
இப்போதும் எங்கள் மனம்
உருகி வேண்டுகிறது
யா அல்லாஹ்!!
கண்ணீர் மீன்களான அந்த
ஜனாஸாக்களின் உயிர்
புன்னகையோடு மிக மென்மையாக கைப்பற்றி
இருக்க வேண்டும் என்றே

மிதந்த புத்தகப்பைகளும்
சப்பாத்துக்களும் விட்டுச்சென்ற
அத்தனையும் நினைவுகளால் கொள்கிறதே
தன்னுடைய ஒவ்வொரு உறவு முறையையும்
பிரிந்த உறவுகள்
துடிக்கும் தவிப்பு எங்கள்
இதயத்தையும் தாக்குகிறது இறைவா!!

தன் கையால் பல உயிர்களையும் மகனையும்
கரை சேர்த்த தந்தையால்
தன் மனைவியையும் மகளையும் காப்பாற்ற
முடியாமல் போன சோகம்
காலத்தால் மறையுமா??
ஆனாலும் என்ன செய்ய!!
யார் யாருக்கு விதிக்கப்பட்டது
அவ்வேளையில் ஒரு கணமேனும்
தாமதிக்காது நடந்தே தீரும் என்பதே இறைவன்
எழுதியஏட்டின் விதி

எண்ணத்தில் இதை நிறுத்தி
பிரார்த்தனை செய்வோம் மனமுருகி
யா அல்லாஹ் கண்ணீரோடு வேண்டுகிறோம்
ஷஹீதுடைய நன்மைகளையும்
சுவனத்தையும் பரிசாக
அந்த ஜனாஸாக்களுக்கு அளிப்பாயாக!!

புதிய தென்றல்
மடவளை மண்ணின் மகள்
ஜெய்னுலாப்தீன் றிஸ்வானா

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல்

## தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...







**துணிந்தெழு**

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

**இணையதளத்திற்கு**

**பிரவேசியுங்கள்**

**www.skymediasl.com**

@skytamil.lk

skytamil.lk@gmail.com

**துணிந்தெழு இதழில் உங்கள்**

**விளம்பரங்களைப் பிரசுரிக்க**

**தொடர்புகளுக்கு**

**077 639 11 88**

**077 247 1464**



9 772792 102002